www.kalvisolai.com

# மதுரை மாவட்டம்

## பொருளியல் பாடத்தில் எளிதில் தேர்ச்சி பெற உதவும் வழிகாட்டி

| வ.எண் | வினாக்களின் வகைகள் | பொதுத் தேர்வில் எழுத வேண்டிய வினாக்கள் | இந்த கையேட்டில் உள்ள வினாக்கள் | பொதுத்தேர்வில் இக்கையேட்டில் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் எண்ணிக்கை | பொதுத்தேர்வில் பெறக்கூடிய மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | **மதிப்பெண் வினாக்கள்** | | | | |
| | சரியான விடையை தேர்வு செய்தல் | 14 | 60 | 14 | 14 |
| | கோடிட்ட இடம் | 12 | 60 | 12 | 12 |
| | பொருத்துக | 12 | 60 | 12 | 12 |
| | ஓரிரு வார்த்தையில் விடை எழுதுதல் | 12 | 60 | 12 | 12 |
| 2 | **3-மதிப்பெண் வினாக்கள்** | 10 | 20 (ஒவ்வொரு 5 வினாக்களிலிருந்து 2-வினாக்கள் கேட்கப்படும் (1-5,6-10,11-15, 16-20) | 8 | 24 |
| 3 | **10-மதிப்பெண் வினாக்கள்** | 6 | 15 (ஒவ்வொரு 5 வினாக்களிலிருந்து 2-வினாக்கள் கேட்கப்படும் (1-5,6-10,11-15) | 6 | 60 |
| 4 | **20-மதிப்பெண் வினாக்கள்** | 3 | 2 | 1 | 20 |
| | | பொதுத்தேர்வில் மொத்தம் எதிர்பார்க்கப்படும் | | | 154 |

**சரியான விடையை தேர்வு செய்தல்:**

**பாடம்-1**

| | | |
|---|---|---|
| 1 | **செல்வ இலக்கணத்தின் ஆசிரியர்**<br>அ)ஆல்.ஃ.பிரடு மார்ஷல் ஆ)இலயனல் ராபின்ஸ் இ)ஆடம் ஸ்மித் ஈ)சாமுவேல்சன் | **(இ)** |
| 2 | **கிடைப்பருமை இலக்கணத்தின் ஆசிரியர்**<br>அ)ஆடம் ஸ்மித் ஆ)சாமுவேல்சன் இ) ஆல்.ஃ.பிரடு மார்ஷல் ஈ))இலயனல் ராபின்ஸ் | **(ஈ)** |
| 3 | **நிகர பொருளாதார நலம் பற்றிய கருத்தை எடுத்துரைத்தவர்**<br>அ)சாமுவேல்சன் ஆ)ஆல்.ஃ.பிரடு மார்ஷல் இ)ஆடம் ஸ்மித் ஈ)இலயனல் ராபின்ஸ் | **(அ)** |
| 4 | **பொருளாதாரம் என்பது**<br>அ)இயல்புரை அறிவியல் )நெறியுரை அறிவியல் ஆ)இரண்டுமே ஈ)எதுவுமில்லை | **(இ)** |
| 5 | **பொருளாதாரத்தில் நாம் பயன்படுத்துவது**<br>அ)பகுத்தாய்வு முறை ஆ)தொகுத்தாய்வு முறை இ)இரண்டுமே ஈ)எதுவுமில்லை | **(இ)** |

**பாடம்-2**

| | | |
|---|---|---|
| 1 | **அடிப்படைப் பொருளியல் பிரச்சனைகளை பொதுவாகக் காணப்படும் சமூக அமைப்பு.**<br>அ)முதலாளித்துவம் ஆ)சமதர்மம் இ)கலப்புப் பொருளாதாரம் ஈ)அனைத்தும் | **(ஈ)** |
| 2 | **பழமை பொருளாதாரம் என்பது**<br>அ)தன்னிறைவுப் பொருளாதாரம் )சந்தைப் பொருளாதாரம் இ)கட்டளைப் பொருளாதாரம் ஈ)பணவியல் பொருளாதாரம் | **(அ)** |
| 3 | **முதலாளித்துவத்தை இயக்கும் அடிப்படை சக்தியாக விளங்குவது**<br>அ)திட்டமிடல் ஆ)தொழில்நுட்பம் இ)அரசு ஈ)இலாபம் | **(ஈ)** |
| 4 | **சமதர்மப் பொருளாதாரத்தில் உற்பத்தி பகிர்வு மற்றும் தீர்வுகளை முடிவு செய்வது**<br>அ)சந்தை ஆ)மத்திய திட்டக்குழு இ)பழக்கவழக்கமும்இமரபுகளும் ஈ)தனியார் துறை | **(ஆ)** |
| 5 | **மெதுவான வேலையும் கையூட்டும் கீழ்கண்டவற்றுள் எதற்கு காரணமாக விளங்குகிறது.**<br>அ)உற்பத்தியின் திறமைக் குறைவு ஆ)வருமானம் மற்றும் செவ்வத்தில் ஏற்றதாழ்வு<br>இ)தொழில் நுட்பமின்மை ஈ)வளங்களைத் திறமையாகப் பயன்படுத்துதல் | **(அ)** |

**பாடம்-3**

| | | |
|---|---|---|
| 1 | **இன்றியமையாத வசதி ஆடம்பர பண்டங்கள் என்பது.**<br>அ)இலவச பண்டங்களை வகைப்படுத்துவது ஆ)விருப்பங்களை வகைப்படுத்துவது<br>இ)பயன்பாட்டினை பிரிப்பது ஈ)எதுவும் இல்லை | **(அ)** |
| 2 | **சமநோக்கு வளைக்கோட்டின் அணுகுமுறையை அறிமுகப்படுத்தியவர்**<br>அ)மார்ஷல் ஆ)இலயனல் ராபின்ஸ் இ)J.R.ஹிக்ஸ் மற்றும் R.G.D.ஆலன் ஈ)ஆடம் ஸ மித் | **(இ)** |
| 3 | **பயன்பாடு என்பது**<br>அ)சமூக கருத்து ஆ)உள்ளுணர்வு சார்ந்த மற்றும் உளவியல் கருத்து<br>இ)அரசின் கருத்து ஈ)அறிவியல் கருத்து | **(ஆ)** |
| 4 | **ஒன்றைப் பண்ட நுகர்வு எதை உணர்த்தும்**<br>அ)உற்பத்தி வாய்ப்பு வளைக்கோடு ஆ)சம இறுதி நிலை பயன்பாட்டு விதி<br>இ)அளிப்பு விதி ஈ)குறைந்துச் செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி | **(ஈ)** |
| 5 | **நுகர்வோர் எச்சம் என்பது**<br>அ)தகுவிலை--உண்மை விலை ஆ)MUN=TUN-TUN-1 இ)தேவை=அளிப்பு ஈ)இல்லை | **(அ)** |

பாடம்-4

| | | |
|---|---|---|
| 1 | **பண்டத்திற்கான தேவை இதனை சார்ந்தது**<br>அ)பண்டத்தின் விலை ஆ)சார்ந்த பண்டங்களின் விலை இ)வருமானம் ஈ)மேற்கூரிய அனைத்தும் | (ஈ) |
| 2 | **தேவை விதி உணர்த்துவது**<br>அ)விலை பண்டங்களுக்கு உள்ள தலைகீழ் உறவு ஆ)விலை பண்டங்களுக்கு உள்ள நேரடி உறவு இ)இரண்டும் ஈ)எதுவுமில்லை | (அ) |
| 3 | **தேவையின் அதிகரிப்பை இதன் மூலம் காணலாம்**<br>அ)தேவை வளைக்கோடு இடம் பெயர்வது ஆ)ஒரே தேவை வளைக்கோட்டில் நகர்ந்து செல்லுதல்<br>இ)தேவை வளைக்கோட்டின் உச்சபுள்ளி ஈ)தேவை வளைக்கோட்டின் கீழ்புள்ளி | (ஆ) |
| 4 | **விலையில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப தேவையின் மாற்றத்தை தோற்றுவிக்கும் அளவு.**<br>அ)வருமான தேவை நெகிழ்ச்சி ஆ)குறுக்கு தேவை நெகிழ்ச்சி<br>இ)விலைத் தேவை நெகிழ்ச்சி ஈ)மேற்கூறிய அனைத்தும் | (இ) |
| 5 | **அளிப்பை தீர்மாணிக்கும் காரணிகள்**<br>அ)உற்பத்தி தொழில்நுட்பம் ஆ)உற்பத்தி காரணிகளின் விலைகள்<br>இ)வரிகளும் சலுகைகளும் ஈ)மேற்குரிய அனைத்தும் | (ஈ) |

பாடம்-5

| | | |
|---|---|---|
| 1 | **சமநிலை புள்ளியல்**<br>அ)ஒரே விலை நிலவும்/விலை நிலையானது ஆ)தேவையும் அளிப்பும் சமம்<br>இ)அப்புள்ளியல் தேவைக்கோடு அளிப்புக்கோட்டை வெட்டும் ஈ) மேற்கூரிய அனைத்தும் | (ஈ) |
| 2 | **சமநிலை விலைக்கும் மேல்**<br>அ)S<D ஆ)S>D இ) S=D ஈ)ஏதுமில்லை | (அ) |
| 3 | **தேவையின் அளவில் மாற்றம் ஏற்படும்**<br>அ)விலை மட்டும் மாறும் பொழுது ஆ)சுவையில் மாற்றம் ஏற்படும் பொழுது<br>இ)மேற்கூறிய இரண்டும் ஈ)ஏதுமில்லை | (அ) |
| 4 | **சமநிலை விலையில் காலத்தின் பங்கை அறிமுகப்படுத்தியவர்**<br>அ)J.R.ஹிக்ஸ் ஆ)J.M.கீன்ஸ் இ) ஆல்.ஃபிரடு மார்ஷல் ஈ)J.S.மில் | (இ) |
| 5 | **நீண்ட காலத்தில்**<br>அ)எல்லா காரணிகளும் மாறும் ஆ)மாறும் காரணி மட்டும் மாறும்<br>இ)மாறா காரணி மட்டும் மாறும் ஈ)மாறும் மற்றும் மாறா காரணிகளின் நிலையாக இருக்கும் | (அ) |

பாடம்-6

| | | |
|---|---|---|
| 1 | **உற்பத்தி என்பது**<br>அ)பயன்பாட்டின் அழிவு ஆ)பயன்பாட்டை உருவாக்குதல் இ)மாற்று மதிப்பு ஈ)ஏதுமில்லை | (ஆ) |
| 2 | **நிலத்தின் ஆரம்ப அளிப்பு விலை**<br>அ)பூஜ்யம் ஆ)ஒன்றுக்கும் அதிகமானது இ)ஒன்றுக்கும் குறைவானது ஈ)ஒன்றுக்கும் சமமானது | (அ) |
| 3 | **உழைப்பை --------- இருந்து பிரிக்க முடியாது**<br>அ)முதல் ஆ)உழைப்பாளரிடம் இ)இலாபம் ஈ)உற்பத்தி அமைப்பு | (ஆ) |
| 4 | **முதலுக்கு அளிக்கப்படும் ஊதியம்**<br>அ)வட்டி ஆ)இலாபம் இ)கூலி ஈ)வாடகை | (அ) |
| 5 | **.---------ஏற்கும் ஒருவரே வெற்றிகரமான தொழில் முனைவோர் ஆவார்** | |

| | | |
|---|---|---|
| | அ)புத்தாக்கம் புனைதல் ஆ)இடர்பாடுகளை<br>இ)உற்பத்தி அலகின் இடத்தைத் தேர்ந்தெடுத்தல் ஈ)ஏதுமில்லை | **(ஆ)** |

**பாடம்-7**

| | | |
|---|---|---|
| 1 | **உண்மை செலவு என்பது**<br>அ)துன்பம் மற்றும் தியாகமும் ஆ)உள்ளுணர்வு இ)முயற்சியும்.தியாகமும் ஈ) மேற்கூரிய அனைத்தும் | **(ஈ)** |
| 2 | **பணச்செலவின் உள்ளடக்கமானது வெளியேறுச் செலவு மற்றும்**<br>அ)உள்ளார்ந்த செலவு ஆ)சமூக செலவு இ)மாறாச் செலவு ஈ)பணச்செலவு | **(அ)** |
| 3 | **சமூக செலவு என்பவை**<br>அ)நிறுவனங்கள் ஏற்றுக் கொள்வதில்லை ஆ)சமுதாயம் ஏற்கும் செலவு<br>இ)உடல்நலத்திற்கு தீங்கு விளைவிப்பது ஈ)மேற்காணும் அனைத்தும் | **(ஈ)** |
| 4 | **சராசரி மாறாச் செலவு இதனால் வகுக்கும் போது கிடைக்கும்**<br>அ)TC/Q ஆ)TFC/Q இ)TVC / Q ஈ)எதுவும் இல்லை | **(ஆ)** |
| 5 | **இறுதிநிலை வருவாய் என்பது இதனுடன் சேர்ந்தால் கிடைப்பது**<br>அ)சராசரி வருவாய் ஆ)மொத்த உற்பத்தி இ)மொத்த வருவாய் ஈ)எதுவும் இல்லை | **(இ)** |

**பாடம்-8**

| | | |
|---|---|---|
| 1 | **நிறைவுப் போட்டி அங்காடியில் காணப்படும் நிலை**<br>அ)ஒரே விற்பனையாளர் ஆ)இரண்டு விற்பனையாளர் இ)எண்ணிக்கையில்லா விற்பனையாளர்கள் ஈ) | **(இ)** |
| 2 | **எந்நிலையில் ஒரு நிறுவனம் சமநிலைப் பெறும்**<br>அ)MC =MR ஆ)MC=AC இ)MR=AR ஈ)MR=AC | **(அ)** |
| 3 | **நிறுவனம் மற்றும் தொழிற்சாலை ஒன்றாக அமைவது**<br>அ)நிறைவுப் போட்டி ஆ)இருவிற்பனையாளர் இ)சில்லோர் ஈ)முற்றுரிமை | **(ஈ)** |
| 4 | **விற்பனை செலவின் மிக முக்கியமான வடிவம் என்பது**<br>அ)விளம்பரங்கள் ஆ)விற்பனை இ)ஒரே மாதிரியான பண்டங்கள் ஈ)எதுவும் இல்லை | **(அ)** |
| 5 | **நிறைவுப் போட்டியில் தேவைக்கோடு இவ்வாறு இருக்கும்.**<br>அ)மேல் நோக்கி சரிந்துசெல்லும் ஆ)கிடைமட்டமாக இருக்கும்<br>இ)கீழ்நோக்கி சரிந்து செல்லும் ஈ)செங்குத்தாக இருக்கும் | **(ஆ)** |

**பாடம்-9**

| | | |
|---|---|---|
| 1 | **வாரம் என்பது இதனுள் ஒன்றை பயன்படுத்தியதற்காக கொடுக்கப்பட்ட விலை**<br>அ)மூலதனம் ஆ)அமைப்பு இ)உழைப்பு ஈ)நிலம் | **(ஈ)** |
| 2 | **இலாபம் இதற்கான வெகுமதி**<br>அ)நிலம் ஆ)மூலதனம் இ)உழைப்பு ஈ)அமைப்பு | **(ஈ)** |
| 3 | **உழைப்புக்கான தேவை**<br>அ)உறுதி தேவை ஆ)நேரடி தேவை இ)பெறப்பட்ட தேவை ஈ)நெகிழ்ச்சி தேவை | **(இ)** |
| 4 | **போலிவாரம் என்ற கருத்தின் ஆசிரியர்**<br>அ)ஆடம் ஸ்மித் ஆ)மார்ஷல் இ)ரிக்கார்டோ ஈ) சாமுவேல்சன் | **(ஆ)** |
| 5 | **நீர்மை விருப்பகோட்பாட்டின் ஆசிரியர்**<br>அ)J.M.கீன்சு ஆ)மார்ஷல் இ)சாமுவோல்சன் ஈ)நைட் | **(அ)** |

## பாடம்-10

| | | |
|---|---|---|
| 1 | **பேரியல் பொருளியியல் சிந்தனையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர்**<br>அ)டேவிட் ரிகார்டோ ஆ) J.M.கீன்ஸ் இ)ஆடம் ஸ்மித் ஈ)மால்தஸ் | (ஆ) |
| 2 | **தொன்மைப் பொருளியல் கோட்பாடு ------------ நிலவுவதாக கருதுகிறது.**<br>அ)வேலையில்லா நிலை ஆ)மறைமுக வேலையின்மை<br>இ)முழுவேலை நிலை ஈ)குறை வேலையின்மை | (இ) |
| 3 | **பேரியல் பொருளாதாரத்தின் மையப் பிரச்சனை**<br>அ)வருமானமும்,வேலைவாய்ப்பும் ஆ)விலையும்,வெளியீடும் இ)வட்டியும்,பணமும்<br>ஈ)ஏதுமில்லை | (அ) |
| 4 | **வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டை விளக்க கீன்சு ------------ பயன்படுத்தினார்**<br>அ)நுகர்வையும் முதலீட்டையும் ஆ)ஒட்டுமொத்த தேவையையும் ஒட்டுமொத்த அளிப்பையும்<br>இ)உற்பத்தியையும் செலவையும் ஈ)அனைத்தும் | (ஆ) |
| 5 | **இறுதிநிலை நுகர்வு நாட்டம்**<br>அ)$\Delta S/\Delta Y$ ,ஆ)C/Y இ) $\Delta P/\Delta Q\Delta$ ஈ)$C/\Delta Y$ | (ஈ) |

## பாடம்-11

| | | |
|---|---|---|
| 1 | **பணக்கொள்கையை அமல்படுத்துவது**<br>அ)மைய அரசு ஆ)மாநில அரசு இ)மைய வங்கி ஈ)தனியார் துறை | (இ) |
| 2 | **பொது மக்களிடம் உள்ள புழக்கப்பணம் என்பது**<br>அ) M1 ஆ) M2 இ) M3 ஈ) M4 | (அ) |
| 3 | **வங்கி வீதம் எப்போது உயர்த்தப்படுகிறது**<br>அ)பணவாட்டம் ஆ)பணவீக்கம் இ)விலை நிலையாக இருத்தல் ஈ)வேலையின்மை | (ஆ) |
| 4 | **பணவீக்கத்தின் போது என்ன நிகழும்**<br>அ)வியாபாரிகள் இலாபம் ஈட்டுவர் ஆ)ஊதியம் ஈட்டுவர் இலாபம் பெறுவர்<br>இ)மாத சம்பளம் பெறுவர் இலாபம் பெறுவர் ஈ)வாடகைக்கு விடுபவர் இலாபம் பெறுவர் | (அ) |
| 5 | **விலைகள் உயரும் போது உள்ள சூழ்நிலையும் மற்றும் தேவை தேக்கமும் அழைக்கப்படுகிறது.**<br>அ)செலவு உந்து பணவீக்கம் ஆ)தேவை ஈர்ப்பு பணவீக்கம்<br>இ)தேக்க நிலைத்தன்மை பணவீக்கம் ஈ)கூலி உந்து பணவீக்கம் | (இ) |

## பாடம்-12

| | | |
|---|---|---|
| 1 | **பொது நிதியானது--------- வருமானம் மற்றும் செலவுடன் தொடர்புடையது**<br>அ)தனியார் துறை ஆ)வேளாண்மை துறை இ)பொதுத்துறை ஈ)தொழில்பிரிவு | (இ) |
| 2 | **வரி வருவாய்**<br>அ)கட்டணம் ஆ)வரிகளின் வகைகள் இ)வருவாய் ஈ)வரியற்ற வருவாய் | (ஆ) |
| 3 | **கூட்டாட்சி குடியரசு இதனைக் கொண்டது**<br>அ)மைய மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆ)மைய மற்றும் மாநில அரசுகள்<br>இ)மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஈ)மேற்கூறிய அனைத்தும் | (அ) |
| 4 | **அ-ரசினால் விதிக்கப்படும் கட்டாய கட்டணம் என்பது**<br>அ)உரிமம் ஆ)வெகுமதியும் மற்றும் மானியம் இ)கடன் ஈ)வரி | |
| 5 | **பூஜிய நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு --------- ஆண்டாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**<br>அ)அடிப்படை ஆண்டு ஆ)நிதியாண்டு இ)புதிய ஆண்டு ஈ)கல்வியாண்டு | (இ) |

# கோடிட்ட இடத்தை நிரப்புதல்

| | | |
|---|---|---|
| | பாடம்-1 | |
| 1 | நுண்ணியல் என்பது-----ஆகும். | சிறிய |
| 2 | உற்பத்தி எனப்படுவது----உருவாக்குவதகும். | பயன்பாடுகளை |
| 3 | பண்டங்களுக்கும் பண்டங்களை மாற்றிக் கொள்வது----ஆகும். | பண்டமாற்று முறை |
| 4 | பொருளாதாரம் என்பது----அறிவியலாகும் | சமூக |
| 5 | பல தரப்பட்ட செலடவத்திற்கு எடுத்துக்காட்டு----. | சமுத்திரம் |
| | பாடம்-2 | |
| 1 | பழமைப் பொருளாதாரத்தில் அடிப்படை பொருளியல் பிரச்சனைகனை---- மற்றும்-----------தீர்த்து வைக்கிறது. | மரபுகளும், பழக்கவழக்கங்களும் |
| 2 | முதலாளித்துவத்தில் அனைத்துவகை பொருளாதார நடவடிக்கைகளும்---மையமாகக் கொண்டே செயல்படுகிறது. | விலைக்கருவி |
| 3 | உற்பத்தி வாய்ப்பு வளைகோடு----எனவும் அழைக்கப்படுகிறது. | உற்பத்தி வாய்ப்பு எல்லை |
| 4 | சமதா்மப் பொருளாதாரத்தின் முக்கிய நோக்கம்---- | சமூக / கூட்டுநலம் |
| 5 | கலப்பு பொருளாதாரத்தின் பொருளாதார நடவடிக்கைகளை கட்டுபடுத்துவது----ஆகும். | தனியார் மற்றும் பொது |
| | பாடம்-3 | |
| 1 | .----------என்பது பண்டகளை,பணிகளை பயன்படுத்துவதாகும் | நுகா்வு |
| 2 | விருப்பங்கள் என்பது----மற்றும்----ஆகும். | போட்டியிடுபவை,ஒன்றையொன்று சாா்ந்தவை |
| 3 | மாா்ஷலின் பயன்பாட்டு அணுகுமுறை என்பது----பகுப்பாய்வாகும். | இயல்பெண் பயன்பாட்டு ஆய்வு |
| 4 | இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாகும் போது மொத்த பயன்பாடு---- ஆகும் | உச்சம் |
| 5 | சமநோக்கு வளைக்கோடு மையத்தை நோக்கி----காணப்படும். | குவிந்து |
| | பாடம்-4 | |
| 1 | தேவைக்கோடு கீழ்நோக்கி வருவதற்கு காரணம்-----. | குறைந்துசெல் இறுதிநிலை பயன்பாட்டுவிதி |
| 2 | தனிநபா் நுகா்வு அட்டவணைகளை ஒன்று சோ்க்கும் போது----ஆகும். | அங்காடித் தேவை அட்டவணை |
| 3 | சமுதாய அந்தஸ்துக்காக தேவைப்படும் பண்டங்கள்----விளைவாகும். | வெப்ளன் விளைவு |
| 4 | தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவா்----. | ஆல்பிரடு மாா்ஷல் |
| 5 | விலை மாற்றத்தால் ஏற்படும் அளிப்பு மாற்ற வீதம்----எனப்படும். | அளிப்பின் நெகிழ்ச்சி |
| | பாடம்-5 | |
| 1 | .-------அளிப்பைத் தீா்மானிக்கும் முக்கிய காரணியாகும். | விலை |
| 2 | வேளாண்மை தொழில் வளா்ச்சி மற்றும் பகிா்வு போன்றவை----ஆகும். | உபமுறைகள் |
| 3 | .----விலையில் எந்த சக்தியும் விலையையோ அளவையையோ மாற்ற முடியாது. | சமநிலை |
| 4 | நவின பொருளியல் வல்லுநா் காலத்தை----மற்றும்----காலமாக பிரித்தனா். | குறுகிய காலம் மற்றும் நீண்ட காலம் |
| 5 | அங்காடிக் காலத்தில் அளிப்புக்கோடு----. | செங்குத்தாக Y அச்சுக்கு இணையாக |

| | | |
|---|---|---|
| **பாடம்-6** | | |
| 1 | நிலமும் உழைப்பும்----உற்பத்திக் காரணிகள் ஆகும். | அடிப்படைக்காரணிகள் |
| 2 | நாடுகளின் செல்வமும் அதை உருவாக்குகின்ற காரணிகளைப் பற்றிய ஆய்வு என்ற நுலை எழுதியவர்----. | ஆடம்ஸ்மித் |
| 3 | ஓர் அங்கவாடியின் விரிவு----முறையில் அளவை தீர்மானிக்கிறது. | வேலைப்பகுப்புமறை |
| 4 | .--------என்பது வேறு பல பண்டநடகளை உற்பத்தி செய்திட மனித முயற்சிகளால் உருவாக்கப்பட்டது. | மூலதனம் |
| 5 | .--------என்பது ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பாகும். | உற்பத்தி சார்பு |
| **பாடம்-7** | | |
| 1 | பணச் செலவினை---- என்றும் அழைக்கலாம். | பெயரளவு செலவு |
| 2 | பொருளாதார இலாபம் என்பது மொத்த வருவாய்க்கும்----உள்ள வேறுபாடு. | பொருளாதார செலவு |
| 3 | மாறாக் காரணிகள் மாறும் காரணிகளை----ல் மட்டுமே வேறுபடுத்த இயலும் | குறுகியகாலம் |
| 4 | மொத்த செலவு என்பது----. | **மொத்த மாறாச் செலவு + மொத்த மாறும்செலவு** |
| 5 | இறுதிநிலை செலவு வளைக்கோடானது----வடிவத்தில் இருக்கும். | U வடிவம் |
| **பாடம்-8** | | |
| 1 | நிறைவுப் போட்டியில் நிறுவனங்கள்----பொருளை உற்பத்தி செய்கிறது. | ஒத்தப்பண்டம் |
| 2 | நிறுவனத்தின் சராசரி வருவாயானது சராசரி செலவை விட அதிகமாக இருப்பின் அந்நிறுவனம்----ஈட்டும். | அதிகபட்ச இலாபம் |
| 3 | நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனம்----. | விலை ஏற்பவர் |
| 4 | முற்றுரிமை சக்தியின் மூலம் பொருளை வடிவமைக்கும் உரிமை---- என்றழைக்கப்படும். | சட்டரீதியான முற்றுரிமை |
| 5 | சில்லோர் முற்றுரிமை அங்காடியில் உள்ள நிறுவனங்கள் தங்களுக்குள்ளே --------செயல்பட வேண்டியதை உணர்ந்திருக்கும். | ஒற்றுமையுடன் கூட்டுறவாக |
| **பாடம்-9** | | |
| 1 | இறுதிநிலை உற்பத்தி திறன் கோட்பாடு என்பது----பகிர்வு கோட்பாடு. | பொதுவான |
| 2 | இறுதிநிலை உற்பத்தி திறன் கோட்பாடு -------போட்டி சந்தையின எடுக்கோளை அடிப்படையாகக் கொண்டது. | நிறைவு |
| 3 | மாற்று ஊதியம் என்பது----செலவை குறிப்பது. | வாய்ப்பு |
| 4 | பணிக்கூலி என்பது ----கூலி என்றும் அழைக்கலாம். | பெயரளவு |
| 5 | அமைப்பை ஏற்படுத்துபவர்----. | தொழில் முயல்வோன் |
| **பாடம்-10** | | |
| 1 | நுகர்வு சார்பு என்பது----மற்றும்----ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குகிறது. | வருமானம் மற்றும் நுகர்வு |
| 2 | .--------என்பது வருமான மாற்றத்தினால் ஏற்படும் மாற்ற விகிதத்தைக் குறிக்கும். | இறுதிநிலை சேமிப்புநாட்டம் |
| 3 | .----------1930ன் உலகப் பெருமந்தத்திற்கு காரணமாகவும் அமைந்தது. | முதலீடு வீழ்ச்சி |
| 4 | .----------என்பது மக்களின் கையிருப்பு(ரொக்கம்)பணம் ஆகும். | நீர்மை விருப்பம் |
| 5 | ஆரம்ப முதலீட்டினால் வருமானத்தில் ஏற்படும் விரிவாக்கத்தின் விளைவு ----------- ஆகும். | முடுக்கி |

| பாடம்-11 | | |
|---|---|---|
| 1 | பண்டங்களைக் கொடுத்து பண்டங்களை வாங்குவது--------என அழைக்கப்படுகிறது. | பண்டமாற்று வாணிகம் |
| 2 | பண வாட்டம் என்பது விலைகள்--------குறிக்கும் | வீழ்ச்சி |
| 3 | பரிமாற்றச் சமன்பாடு MV=PT என்பதை அளித்தவர்------- | இர்விங் பிஷர் |
| 4 | தாவும் பணவீக்கத்தை--------- என்றும் அழைக்கலாம். | மிகைவேக பணவீக்கம்/ஓடும் பணவீக்கம் |
| 5 | பணக்கொள்கை---------கட்டுபடுத்த உதவுகிறது. | பண்ட வேறுபாடு |
| பாடம்-12 | | |
| 1 | .-------என்பது பல்வேறு வழிகளில் அரசுக்கு வரும் வருவாய். | அரசின் நிதி |
| 2 | நேரடி மற்றும் விகிதாச்சார சலுகை பெறாமல் போவதை இவ்வாறு------- என்று அழைக்கின்றோம். | சரியீடு |
| 3 | வரிவிதிப்பின் அடிப்படை கோட்பாடை------என்றும் அழைக்கின்றோம். | வரிவிதிப்புக் கொள்கை |
| 4 | நேரடி மற்றும் மறைமுக வரி விதிப்பு முறை--------அடிப்படையாக கொண்டு விதிக்கப்படுகிறது. | நிகழும் மாற்றம் |
| 5 | .--------வரி என்பது வளர்வித வரியையும் விகிதச்சார வரியையும் உள்ளடக்கியது ஆகும். | மீத வளர்வீத |

## பொருத்துக

| பாடம்-1 | | |
|---|---|---|
| 1 | புனித வரி விதிப்புமறை | ஆடம்ஸ்மித் |
| 2 | முதல் நோபல் பரிசு | டிம்பர்கன் மற்றும் பிரிஷ் |
| 3 | நிதிக்கொள்கை | தள்ளுபடியும் உதவித் தொகையும் |
| 4 | செல்வம் | இருப்பு |
| 5 | சமச்சீர் நிதிநிலை அறிக்கை | வருவாயும் செலவும் சமமாக இருக்கும் |
| பாடம்-2 | | |
| 1 | கடன் அளவு கட்டுப்பாடு | வட்டிவீதம் |
| 2 | வாய்ப்புச் செலவு | அடுத்த சிறந்த மாறுபட்ட பண்த்ததை கொடுத்தல் |
| 3 | மலிவுப் பணக்கொள்கை | குறைந்த வட்டிவீதம் |
| 4 | ஆட்சியாளரின் ஆதிக்கம் | சமதர்மம் |
| 5 | பணத்தின் மதிப்பு | பணத்தின் வாங்கும் சக்தி |
| பாடம்-3 | | |
| 1 | ஒட்டுமொத்த தேவை | C+I+G+(X-M) |
| 2 | பொருளாதாரக் கோட்பாடுகள் | மார்ஷல் |
| 3 | K | 1/1-MPC |
| 4 | சமநோக்கு வளைகோடு | சாதாரணதரம் |
| 5 | கீன்சு | நீர்மைவிருப்பம் |
| பாடம்-4 | | |
| 1 | எச்சஉரிமை கூலிக்கோட்பாடு | வாக்கர் |
| 2 | தேனீர் மற்றும் காபி | பதிலீட்டுப் பண்டங்கள் |
| 3 | கடன்நிதிக் கோட்பாடு | புதிய தொன்மை கால கோட்பாடு |
| 4 | நீண்டகால அளிப்புக்கோடு | அதிக நெகிழ்ச்சியுடையது |
| 5 | இடர்தாங்கும் இலாபக் கோட்பாடு | ஹாலே |

| | | |
|---|---|---|
| | **பாடம்-5** | |
| 1 | உலக அங்காடி | தங்கம் மற்றும் வெள்ளி |
| 2 | மிகைத்தேவை | D>S |
| 3 | தென்ஆப்பிரிக்கா | வைரம் |
| 4 | Ed>1 | மிகைத்தேவை நெகிழ்ச்சி |
| 5 | முற்றுரிமையாளர்போட்டி | E.H.சேம்பர்ளின் |
| | **பாடம்-6** | |
| 1 | சராசரி தொலைவு | ஓர் அலகு செலவு |
| 2 | வேலை பகுப்புமறை | ஆடம் ஸ்மித் |
| 3 | நீண்டகால சராசரி செலவு வளைகோடு | திட்டவளைகோடு |
| 4 | தேய்வுவீத வரி | வரிவிதிப்புவீதம் குறையும் |
| 5 | இலாபம் | TR-TC |
| | **பாடம்-7** | |
| 1 | தொழில் முனைவோர் ஓர் புத்தாக்கப்பணி | பேராசிரியர் சும்பீட்டர் |
| 2 | மொத்தசெலவு | TFC+TVC |
| 3 | உற்பத்திசார்பு | காப் டக்ள்ஸ் |
| 4 | இடர்பாடுகளின் தொகுப்பு | ஹாலே |
| 5 | உடல் அல்லது அறிவு உழைப்பு | மார்ஷல் |
| | **பாடம்-8** | |
| 1 | சமநிலை | விலை மற்றும் அளவின இணை |
| 2 | நுகர்வோர் கோலாச்சம் | நிறைவுப் போட்டி |
| 3 | தள்ளுபடிவிலை அல்லது கழிவு விலை | ஆண்டு இருப்பை விற்று தீர்க்க |
| 4 | MCn | TCn-TC(n-1) |
| 5 | குறுகியகால விலை | தேவையும் அளிப்பும் |
| | **பாடம்-9** | |
| 1 | விலை தேவை நேரடியான உறவு | வெப்ளன் விளைவு |
| 2 | காத்திருத்தல் வட்டிக் கோட்பாடு | மார்ஷல் |
| 3 | இரு புள்ளிகளுக்கிடையேயுள்ள பரிவு | வளைவு |
| 4 | தொழில்நுட்ப முற்றுரிமை | கோ-கோ-கோலா |
| 5 | குறுக்குத் தேவை நெகிழ்ச்சி பூஜ்யம் | X மற்றும் Y அளிப்புடையன அல்ல |
| | **பாடம்-10** | |
| 1 | விருப்பங்கள் | விளம்பரங்கள் |
| 2 | சரிவுக்கோட்பாடு | செங்குத்து மற்றும் கிடைமட்டம் |
| 3 | அதிகபட்ச நன்மைகள் | ஹீக்ஸ் மற்றும் டால்டன் |
| 4 | இயங்குநிலை இலாபகோட்பாடு | கிளார்க் |
| 5 | ஆடம்பர பண்டங்கள் | வைர ஆபரணங்கள் |
| | **பாடம்-11** | |
| 1 | குறைந்தபட்ச உற்பத்தி செலவு | அதிகபட்ச நன்மைகள் |
| 2 | கடன்தன்மை கட்டுபாடு | அறிவுறுத்தல் |
| 3 | தனியார் சொத்துரிமை | தலையிடாக் கொள்கை |
| 4 | Y | C+S |
| 5 | சந்தை சக்திகள் | அளிப்பு, தேவை, விலை |
| | **பாடம்-12** | |
| 1 | பொருளாதாரக் கோட்பாடுகள் | மார்ஷல் |
| 2 | வளர்விதவரி | சிறந்த வரிமுறை |
| 3 | இயங்குநிலை அணுகுமுறை | காலகட்டம் |
| 4 | கூலியும் விலையும் ஒன்றையொன்று தள்ளுகிறது | ஊர்ந்து செல்லும் பணவீக்கம் |
| 5 | வருமானம் | ஓட்டம் |

ஓரிரு வார்த்தைகளில் விடையளி

| | | |
|---|---|---|
| **பாடம்-1** | | |
| 1 | பொருளாதாரத்தின் வேறு பெயர் என்ன? | அரசியல் பொருளாதாரதம் |
| 2 | எக்னாமெட்ரிக்ஸ் எனப்படுவது எந்தெந்த பாடங்களை உள்ளடக்கியது? | புள்ளியல், கணக்குப்பொருளியல் |
| 3 | ரிக்கோர்டா எந்த முறையைப் பயன்படுத்தினர்? | பகுத்தாய்வுமறை |
| 4 | இலவச பண்டங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக? | காற்று, சூரிய ஒளி |
| 5 | பண வருமானத்திற்கு வேறு பெயர் என்ன? | பெயரளவு வருமானம் |
| **பாடம்-2** | | |
| 1 | பழமைப் பொருளாதாரம் ஓர் தன்னிறைவுப் பொருளாதாரமா? | ஆம் |
| 2 | முதலாளித்துவத்தில் உற்பத்தி ஏன் அதிகரிக்கப்படுகிறது? | இலாபநோக்கு |
| 3 | அளவுக்கதிகமான உற்பத்தியின விளைவு யாது? | வீழ்ச்சி |
| 4 | பொதுவுடமைப் பொருளாதாரத்தில் வெற்றிபெற்ற இருநாடுகளைக் கூறுக? | சீனா, கியூபா |
| 5 | கலப்பு பொருளாதாரத்தில் திட்டமிடுதல் உண்டா? | ஆம் |
| **பாடம்-3** | | |
| 1 | பயன்பாட்டை வரையறு? | விருப்பங்களை நிறைவுசெய்யும் சக்தி |
| 2 | சம - இறுதிநிலைப் பயன்பாட்டிற்கு வேறு பெயர் என்ன? | காஸன் இரண்டாம்விதி |
| 3 | சமநோக்கு வளைகோடு என்றால் என்ன? | சமநோக்கு வளைகோடு என்பது இரண்டு பண்டங்களின் பல்வேறு இணைப்புகளின் மூலம் கிடைக்கும் |
| 4 | சமநோக்கு தொகுதி என்றால் என்ன? | சமநோக்கு தொகுதி என்பது இரண்டு பண்டங்களுக்கான வெவ்வேறு நிலையான பயன்பாட்டை விளக்கும் |
| 5 | நிதிநிலை கோட்டிற்கு வேறு பெயர் என்ன? | விலை விகிதகோடு |
| **பாடம்-4** | | |
| 1 | பொருளாதார கோட்பாட்டின் அடிப்படை எடுக்கோள்கள் யாவை? | மற்றவை மாறாதிருக்கும்போது |
| 2 | செழுமையின் போதும்,மந்தத்தின் போதும் தேவை எவ்வாறு மாறுபடுகிறது? | செழுமையின்போது தேவை அதிகரிக்கும் மந்தத்தின்போது தேவை குறையும் |
| 3 | புள்ளி முறையின் வாய்பாடுகள் என்ன? | ep=தேவைக்கோட்டின் கீழ்பிரிவு/தேவைகோட்டின் மேல்பிரிவு |
| 4 | வருமான தேவை நெகிழ்ச்சி என்றால் என்ன? | வருமானத்தில் ஏற்பட்ட மாற்றத்தால், தேவையில் ஏற்பட்ட மாற்ற அளவு |
| 5 | உழைப்பின் தேவை நெகிழ்வதற்றதாக இருக்கும்போது,ஒரு தொழிற்சங்கம் ஊதியத்தை உயர்த்த முடியுமா? | ஆம் |
| **பாடம்-5** | | |
| 1 | பொது சமநிலை என்றால் என்ன? | மாற்றத்திற்கான சூழல் காணப்படாதநிலை |
| 2 | தேவைக் கோட்டினை இடம் பெயரச் செய்யும் காரணிகள் யாவை? | வருமானம்,சுவை,பதலீட்டுப் பண்டத்தின்விலை |
| 3 | காலத்தின் பங்கினை அறிமுகப்படுத்தியவர் யார்? | மார்ஷல் |
| 4 | நிலையான முதலீட்டிற்கு ஒரு உதாரணம் கொடு? | கட்டிடம்,கனரக இயந்திரங்கள், முதலீட்டு சாதனங்கள் |

| | | |
|---|---|---|
| 5 | அங்காடிக் காலத்தில் அளிப்பு நிலையானதா? | ஆம் |
| | **பாடம்-6** | |
| 1 | சமுதாய மாற்றம் காணும் முகவர் யார்? | தொழில்முனைவோர் |
| 2 | அகச்சிக்கனங்கள் எவ்வாறு தோன்றுகிறது? | நிறுவனத்தின் உள்ளிருந்து |
| 3 | சம அளவு உற்பத்திக் கோட்டிற்கு வேறு பெயர் யாது? | சம உற்பத்திகோடு |
| 4 | உற்பத்தியாளர் சமநிலையை அடைய நிபந்தனை யாது? | MRTSxy=Px/Py |
| 5 | காப்-டக்லஸ் உற்பத்தி சார்பினைக் கூறுக? | Q=bLaCb |
| | **பாடம்-7** | |
| 1 | சராசரி வருவாய் மாறாமல் இருக்கும் போது,இறுதிநிலை வருவாயின் நிலை என்ன? | MR மாறாமல் இருக்கும் /ARவுடன் பொருந்திவரும் |
| 2 | இறுதிநிலை வருவாய் என்பது என்ன? | மொத்தவருவாயுடன் சேர்ந்த கூடுதல் |
| 3 | சமமுறிவுப் புள்ளி என்றால் என்ன? | இலாபமும்,நஷ்டமும் இல்லாநிலைப்புள்ளி |
| 4 | உறை வடிவ வளைக்கோடு என்பது என்ன? | **குறுகியகால செலவு கோட்டின் ஒருதொகுதி / திட்ட வளைகோடு** |
| 5 | சராசரி செலவை எவ்வாறு கணக்கிடுவாய்? | TC/Q |
| | **பாடம்-8** | |
| 1 | தொழிற்சாலை என்றால் என்ன? | பலநிறுவனங்களைகொண்டது |
| 2 | பொது பயன்பாடுகளை மேற்கொள்பவர் யார்? | அரசியல் பொருளாதாரதம் |
| 3 | அரசாங்கம்,முற்றுரிமையை எவ்வாறு கட்டுபடுத்தும்? | வரிவிதிப்பு / சட்டமுறை |
| 4 | முற்றுரிமை போட்டியின் முக்கியமான சிறப்பியல்புகள் எவை? | பண்ட வேறுபாடு |
| 5 | MRTP-சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது? | 1969 |
| | **பாடம்-9** | |
| 1 | ரிக்கார்டோவின் கூற்றுப்படி எல்லா நிலங்களும் வளம் பெறுகின்றன? | இல்லை |
| 2 | அனைத்து நிலங்களும் சம அளவில் வளம் பொருந்திய நிலமாக இருந்தாலும், வாரம் எழுமா? | ஆம் |
| 3 | ஏஜியோ வட்டி கோட்பாட்டின் ஆசிரியர் யார்? | போம்-போகுவர்க் |
| 4 | இலாப-வாரகோட்பாட்டின் ஆசிரியர் யார்? | வாக்கர் |
| 5 | சும்பீட்டரின் இலாப கோட்பாட்டின் பெயர் என்ன? | புத்தாக்கம் கோட்பாடு |
| | **பாடம்-10** | |
| 1 | இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவின் தடையில்லா வாணிக பொருளாதாரத்தை முடக்கியது யாது? | பெருமந்தம் |
| 2 | J.B சேயின் சந்தை விதியைக் கூறுக? | அளிப்பு அதன் தேவையை உண்டாக்கும் |
| 3 | வேலைவாய்ப்பு,வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுக் கோட்பாட்டை உருவாக்கியவர் யார்? | கீன்சு |
| 4 | ஒட்டுமொத்த தேவையும்,,ஒட்டுமொத்த அளிப்பும் சந்திக்கும் புள்ளிக்கு என்ன பெயர்? | கீன்சுகுறுக்கு |
| 5 | பெருக்கியின் வாய்ப்பாட்டை எழுதுக? | K=1/1-MPC |
| | **பாடம்-11** | |
| 1 | நாட்டின் பண அளிப்பைக் கட்டுபடுத்தும் வங்கி எது? | மையவங்கி |
| 2 | அருமைப் பணக் கொள்கை எப்பொழுது கடைபிடிக்கப்படுகிறது? | பணவீக்ககாலத்தில் |
| 3 | விலையில் மாற்றமில்லாத போது ஏற்படும் பணவீக்கம் யாது? | கட்டுபடுத்தப்பட்ட பணவீக்கம் |
| 4 | ‘கூலி’குறைப்பு பணவாட்டத்திற்கு ஒரு தீர்வு ஆகுமா? | இல்லை |
| 5 | மிகைவேக பணவீக்கத்தினை சந்தித்த ஒரு நாடு எது? | ஜெர்மனி |

| பாடம்-12 | | |
|---|---|---|
| 1 | வரி என்பது என்ன? | கட்டாயம் செலுத்தல் வேண்டும் |
| 2 | VAT எனடறால் என்ன? | மதிப்பு கூட்டுவரி |
| 3 | விகிதச்சார வரி விதிப்புமுறை என்றால் என்ன? | ஒரே மாதிரியான வரிவிகிதம் |
| 4 | நிதிநிலை அறிக்கையின் வகைகள் யாவை? | சமநிலை மற்றும் சமநிலையற்ற நிதிநிலை அறிக்கை |
| 5 | பொதுக்கடன் என்பது என்ன? | பொதுமக்களிடமிருந்து கடன்பெறுவது |

## மூன்று மதிப்பெண் வினாக்கள்:-

**பாடம் -2**

**அடிப்படைப் பொருளியல் பிரச்சனைகள்**

**1. எந்த ஒரு சமுதாயத்திலும் காணப்படும் அடிப்படைப் பிரச்சனைகள் யாவை?**

எந்த ஒரு சமுதாயமும் கீழ்க்காணும் பிரச்சனைகளை முன் வைத்தே தெரிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

1. எந்தப் பொருளை உற்பத்தி செய்வது, எவ்வளவு உற்பத்தி செய்வது?
2. பண்டங்கள் எவ்வாறு தயாரிக்கப்பட வேண்டும்?
3. பண்டங்கள் யாருக்காக தயாரிக்கப்பட வேண்டும்?

**2. பொதுவான பொருளாதார முறைகளின் பெயர்களைக் கூறுக.**

1. பழைமைப் பொருளாதாரம்
2. முதலாளித்துவ / அங்காடிப் பொருளாதாரம்
3. பொதுவுடைமை / கட்டளைப் பொருளாதாரம்
4. கலப்புப் பொருளாதாரம்

**3. பொதுவுடைமையின் அடிப்படைச் சிறப்பம்சங்களைக் கூறுக.**

**பொதுவுடைமையின் சிறப்பம்சங்கள்:**

1. இலாப நோக்கின்றி சமூக நலனே முக்கியக் குறிக்கோள்
2. தனியார் சொத்துரிமையின்மை
3. பொருளியல் கொள்கை முடிவுகளை மையத் திட்டக்குழு மேற்கொள்ளுதல்
4. அங்காடிச் சக்திகள் இல்லை

**4. இந்தியப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரமா? விவரி.**

ஆம். இந்தியப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரமேயாகும். ஏனெனில் ஒரு கலப்புப் பொருளாதார அமைப்பின் பொருளாதாரச் செயல்பாடுகளில் அரசின் இயக்கமும்/ அங்காடி சக்திகளின் இயக்கமும் ஒரு சேரக் காணப்படும். இந்தியாவில் தனியாரும், அரசுத் துறைகளும் ஒரு சேரக் காணப்படுவதால் இந்தியா ஒரு கலப்புப் பொருளாதார நாடாகும்.

**5. வாய்ப்புச் செலவு என்றால் என்ன?**

வாய்ப்புச் செலவு என்பது சில வாய்ப்புகளை இழப்பதால் ஏற்படும் செலவாகும். அதாவது அந்த வாய்ப்புகளின் மூலம் பெற்றிருக்ககூடிய நன்மைகள் ஆகும். (எ.கா) தொலைக் காட்சியில் கிரிக்கெட் பார்க்க வேண்டுமெனில் படிக்கும் நேரத்தை இழக்க வேண்டும். இதன் மூலம் கூடுதலாக பெறக்கூடிய மதிப்பெண்களை இழக்க நேரிடும்.

## பாடம் - 5 - சமநிலை விலை

**6.சமநிலை விலை என்றால் என்ன?**

ஒரு குறிப்பிட்ட விலையில் வாங்குபவர்களின் விருப்பமும் விற்பவர்களின் விருப்பமும் சமமாகும். இந்நிலையில் *வாங்குபவர்கள் வாங்க விரும்பும் அளவும், விற்பவர் விற்க விரும்பும் அளவும் சமமாகும்.* இவ்விலையே சமநிலை விலை என்று அழைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட விலையில் தேவைக்கோடும், அளிப்பக் கோடும் சந்திப்பது சமநிலையாகும். பல அங்காடிகளில் தேவை,அளிப்பு சமநிலையே பொருளாதாரச் சமநிலையாகும்.

**7.தேவையில் மாற்றம், தேவைக்கோடு இடம் பெயர்தல் வேற்றுமைப்படுத்துக.**

விலை மாறும் போது தேவை மாறும் இது தேவை மாற்றமாகும். இதனால் தேவைக்கோடு மாறாது. தேவையின் அளவில் மட்டும் மாற்றமிருக்கும். ஆனால் வருமானம் சுவை, பதிலிப் பண்டங்களின் விலை போன்ற தேவையைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஏற்படும் மாற்றம் தேவைக் கோட்டை இடம் பெயரச் செய்யும்.

**8.அளிப்புக் கோடு இடம் பெயர்தலுக்கான காரணிகள் யாவை?**

சந்தையில் அளிப்பவர் அல்லது விற்போரின் எண்ணிக்கை உற்பத்திக் காரணிகளின் விலை போன்றவை அளிப்பை பாதிக்கும் காரணிகளில் அடங்கும். இக்காரணிகள் விலையில் மாற்றம் ஏற்படாவிட்டாலும் அளிப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

**9.. நீண்ட காலம், குறுகிய காலம் எழுதுக?**

**நீண்ட காலம்:**

நீண்ட காலம் என்பது அனைத்து உள்ளீட்டுப் பொருள்களையும் மாற்றிக் கொள்ளக் கூடிய கால கட்டத்தைக் குறிக்கும்.

**குறுகிய காலம்:**

ஒரு நிறுவனத்தின் குறுகிய காலம் என்பது உள்ளீட்டுப் பொருள்களில் ஏதேனும் ஒன்றை மாறாத உள்ளீடாக வைத்துக் கொள்ளும் கால அளவைக் குறிக்கும் குறுகிய மற்றும் நீண்ட காலம் நிறுவனத்திற்கு நிறுவனம் மாறாகும்.

**10. அங்காடிக் காலம் சிறு குறிப்பு வரைக.**

**அங்காடிக் காலம்:**

அங்காடிக் காலம் என்பது, தேவையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கேற்ப அளிப்பில் எவ்வித மாற்றமும் செய்ய இயலாத நிலையைக் குறிக்கும். *அங்காடிக் காலத்தில் அளிப்பின் அளவில் மாற்றம் நிகழாது.* இக்காலத்தில் தேவையில் மாற்றம் ஏற்படக்கூடும். இவ்வங்காடிக் காலத்தில் சமநிலை விலையானது தேவை. மாற்றத்தினாலும், நிலையான அளிப்பினாலும் நிர்ணயிக்கப்படுகிறது. (எ.கா) காய்கறிகள், பழங்கள், மலர்கள் போன்றவற்றிற்கான அளிப்புகள்.

## பாடம். 6. உற்பத்தி

**11. பயன்பாட்டின் வகைகளைக் கூறுக?**

**வடிவப்பயன்பாடு:** ஒரு பொருளின் அமைப்பை மாற்றும் போது அதன் பயன்பாடு அதிகரிக்கக் கூடும்.

**இடப்பயன்பாடு**: ஒரு பண்டமானது ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு கொண்டு செல்வதால் அதன் பயன்பாடு அதிகரிக்கும்.

**காலப்பயன்பாடு**: பண்டமானது ஒரு இடத்திலிருந்து வேறொரு எதிர்காலப் பயன்பாட்டிற்காக சேர்த்து வைக்கபபடும்போது அதன் பயன்பாடு உயர்கிறது.

**உடைமைப் பயன்பாடு:** உடைமை அல்லது பண்டங்களின் உடைமை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாறுவது உடைமைப் பயன்பாடு ஆகும்.

**12. உழைப்பு என்றால் என்ன?**

உற்பத்திப் பாதையில் உழைப்பு என்பது மனித இடுபொருள் ஆகும். “ஒரு பணியை ஒருவர் செய்திடுவதால் அவருக்குக் கிடைக்கும் மனநிறைவு மட்டுமின்றி அதனை செய்வதற்காக *கைமாறு எதிர்பார்த்து* மனிதன் தன் உடல் அல்லது அறிவை முழுமையாகவோ பகுதியாகவோ பயன்படுத்தி மேற்கொள்ளும் முயற்சியே உழைப்பாகும்” என *ஆல்பிரட்மார்ஷல்* கூறுகிறார்.

**13. வேலைப் பகுப்புமுறை என்பதன் பொருள் யாது?**

ஆடம் ஸ்மித் தனது 'நாடுகளின் செல்வம்' என்ற நூலில் வேலைப் பகுப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ளார்.

ஒரு உற்பத்தி முறையை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவினிடம் ஒப்படைத்தலே வேலைப் பகுப்பு முறை எனப்படும். (எ.கா)ஆய்த்த ஆடை, தயாரிப்பில் கைப்பகுதி, உடல்பகுதி, கழுத்துப்பகுதி என தனித்தனியாக வைத்து ஒன்றாக்கி சட்டையாக்குதல்.

**14. மூலதனத்தின் வடிவங்கள் யாவை?**

1. பருமப் பொருள் மூலதனம் (அ) பொருட்சார் மூலதனம்
   (எ.கா) இயந்திரங்கள், கருவிகள், கட்டிடங்கள்

2. பண மூலதனம் (அ) பணவியல் வளங்கள் ஆதாரங்கள்
   (எ.கா) பணம்,வங்கி, இருப்ப, பங்கு பத்திரங்கள்

1. மனித மூலதனம் (அ) மனிதத்திறன் வளங்கள்:
   கல்வி, பயிற்சி, உடல்நல முதலீடு.

**15. உற்பத்தி சார்பு என்றால் என்ன?**

**உற்பத்தி சார்பு:**

உற்பத்திசார்பு என்பது ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பாகும். உள்ளீடு என்பது உற்பத்திக்குப் பயன்படும். நிலம், மூலதனம், உழைப்பு, தொழிலமைப்பு ஆகிய உற்பத்திக்காரணிகளாகும். வெளியீடு என்பது உற்பத்தீயன் மொத்த அளவைக் குறிக்கிறது.

## பாடம் - 7
## செலவும் வருவாயும

**16. குறுகிய மற்றும் நீண்டகாலத்திற்கு உள்ள வேறுபாடு யாது?**

குறுகியகாலத்தில் சில உற்பத்தி காரணிகளை மாற்றமுடியாது. எனவே தேவை மாற்றதிற்கேற்ப,மூலதனக் கருவிகள் இயந்திரங்களின் அளவை அந்நிறுவனம் மாற்றமுடியாது.

நீண்டகாலத்தில் அனைத்துக் காரணிகளை மாறக்கூடியவை. எனவே தேவையின் மாற்றதிற்கேற்ப,மூலதனக் கருவிகள் இயந்திரங்களின் அளவை அந்நிறுவனம் மாற்றிக்கொள்ளும்.

**17. வாய்ப்புச் செலவு என்றால் என்ன?**

ஒரு பண்டத்தின் சிறந்த பயன்பாடு தேர்ந்தெடுக்கபடுவதால் அடுத்த சிறந்த பயன்பாடு விட்டுக் கொடுக்கபட வேண்டியுள்ளது. எடுத்துகாட்டாக கோதுமையைப் பயிரிடும் உழவர் தன்னிடம் உள்ள அதே உற்பத்தி காரணிகளைப் பயன்படுத்தி உருளைகிழங்கை சாகுபடி செய்யலாம். ஒரு குவிண்டால் கோதுமையின் பிறவாய்புச் செலவு யாதெனில் விட்டுத்தந்த உருளைக்கிழங்கின் உற்பத்தி அளவேயாகும்.

**18. பொருளாதார செலவு என்றால் என்ன?**

**பொருளாதார செலவு:**

வெளியுறு செலவுகள் மட்டுமின்றி உள்ளார்ந்த செலவுகளையும் சேர்ந்த மொத்தக் தொகையே பொருளாதாரச் செலவாகும். தன்னுடைய சுய உழைப்பு, முயற்சி, சிந்தனை மற்றும் தனக்குச் சொந்தமான காரணிகளை ஒரு தொழில் முனைவோர் உற்பத்தியில் பயன்படுத்துவதால் அச்சுய சேவைக்கான வெகுமதியே உள்ளார்ந்த செலவாகும். இதற்கு மறைந்திருக்கும் செலவு என்ற பெயரும் உள்ளது.

***பொருளாதாரச் செலவு = வெளியுறு செலவுகள் + உள்ளாந்த செலவுகள்***

**19. இறுதி நிலை செலவு என்றால் என்ன?**

**<u>இறுதிநிலை செலவு</u>**

ஏற்கனவே உள்ள உற்பத்தி அளவில், ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால், மொத்த செலவில் ஏற்படும் கூடுதல் நிகர அளவு செலவே இறுதிநிலை செலவு என்ற வரையறை செய்யப்படுகின்றது. எடுத்துக்காட்டாக ஒரு நிறுவனம் 99 அலகுகள் உற்பத்தி செய்ய ரூ.9000ம் செலவாகிறது. 100 அலகுகள் உற்பத்தி செய்ய ரூ.10,000ம் செலவாகிறது எனில் இறுதிநிலைச் செலவு ரூ.1000/-ம் ஆகும்.

$$MC_n = TC_n - TC_{(n-1)}$$

$MC_n$ = இறுதி நிலைச் செலவு

$TC_n$ = n அலகுகள் உற்பத்தி செய்ய ஆகும் மொத்த செலவு

$TC_{n-1}$ = n-1 அலகுகள் உற்பத்தி செய்ய ஆகும் மொத்தச் செலவு

**20. MC மற்றும் AC-க்கும் இடையேயுள்ள உறவுகளைக் கூறு.**

**<u>MC & AC-க்கு இடையேயுள்ள தொடர்பு:</u>**

1. இறுதிநிலை செலவு சராசரி செலவைவிட குறைவாக இருக்கும் போது, சராசரி செலவு குறைகின்றது.
2. இறுதிநிலை செலவு சராசரி செலவை விட அதிகமாக இருக்கும் போது சராசரி செலவு அதிகரிக்கின்றது.
3. இறுதிநிலைச் செலவு வளைகோடு சராசரி வளைகோட்டில் தாழ்ந்த (குறைந்த) புள்ளியில் கீழிருந்து வெட்ட வேண்டும். இவ்வாறு சராசரி செலவின் (AC) குறைந்த புள்ளியில் MC. AC க்கு சமமாக இருக்கும்.

## <u>பத்து மதிப்பெண் வினாக்கள்</u>

**1) நீண்டகால சராசாரி செலவு பற்றி குறிப்பு வரைக.**

நீண்ட காலத்தில் அனைத்துக் காரணிகளும் மாறக் கூடியவை. எனவே தேவையின் மாற்றத்திற்கேற்ப, மூலதனக் கருவிகள் மற்றும் இயந்திரங்களின் அளவை அந்நிறுவனம் மாற்றிக் கொள்ளக் கூடும். நீண்ட கால சராசரி வளைகோடு வெளியிடு உற்பத்திக்கும், நீண்ட கால உற்பத்தி செலவிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குகிறது.






நீண்டகாலத்தில் உற்பத்தி அளவில் ஒரு நிறுவனம் பல்வேறு பதிலிகளைக் கொண்டுள்ளது என்ற எடுகோளின் அடிப்படையில் அமைந்துள்ளது. SAC – கோடு ஒரு நிறுவனத்தின் குறுகிய கால செலவையும், அதன் உற்பத்திக்கும் உள்ள தொடர்பைக் குறிக்கிறது.

மேற்காணும் வரைபடத்தில்

$SAC_1$ – சிறிய நிறுவனத்தையும்

$SAC_2$ – நடுத்தர நிறுவனத்தையும்

$SAC_3$ – பெரிய நிறுவனத்தையும் குறிக்கும்

குறுகிய காலத்தில் OA – அளவு உற்பத்தி தேவைப்படும் போல குறைந்தளவு உற்பத்தியையும், OB – அளவு தேவைப்படும் போது நடுத்தர உற்பத்தியையும், OD- அளவு தேவைப்படும் போது பெரிய அளவு உற்பத்தியையும் தேர்ந்தெடுக்கும்.

நீண்ட காலத்தில் அந்நிறுவனம் ஒரு தொழிற் சாலையிலிருந்து மற்றொன்றிற்கு மாறுகிறது. உற்பத்தியளவு மாறுபடும் பொழுது ஒரு புதிய நிறுவனம் சேர்க்கப்படுகிறது. நிறுவனத்தின் அளவு உட்பட அனைத்து உள்ளீடுகளும் மாறும் பொழுது, ஒரு குறிப்பிட்ட அளவுஉற்பத்தி நிலைக்கு, நீண்டகால உற்பத்திச் செலவானது குறைந்தபட்ச உற்பத்தி செலவாக இருக்கும்.

நீண்ட கால சராசரிச் செலவு வளைகோடு திட்ட வளைகோடு என்று அழைக்கப்படுகிறது. ஏனனெனில் இவ்வளைகோடு ஒரு நிறுவனத்திற்கு வெவ்வேறான உற்பத்தி அளவை திட்டமிடப் பயன்படுகிறது. இது உறை வடிவ வளைகோடு எனவும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் இது பல குறுகிய காலச் செலவு கோடுகளை உள்ளடக்கியது.

மேற்கண்ட வரைபடத்திலிருந்து, நீண்ட கால சராசரி செலவு வளைகோடு முதலில் ஒவ்வொரு அலகு அதிக உற்பத்தியுடன் குறைந்து ஒரு குறிபிட்ட புள்ளிக்கு பிறகு அதிகரித்து ஒரு படகு வடிவ வளைகோட்டை ஏற்படுத்துகிறது.

## 2) AR மற்றும் MR கோடுகளின் இடையேயுள்ள உறவுகள் எழுதுக.

**<u>சராசரி வருவாய் (AR) இறுதிநிலை வருவாய் (MR) வளைகோடுகளுக்கு இடையே உள்ள தொடர்பு:</u>**

சராசரி வருவாய் (விலை) நிலையாக இருக்கும் போது இறுதிநிலை வருவாயும் நிலையாக இருந்து இரண்டும் ஒரே வளைகோடாய் சேர்ந்து விடும்.

| விற்பனை செய்யப்படும் அலகுகள் | விலை | மொத்த வருவாய்(TR) | சராசரி வருவாய் (AR) | இறுதிநிலை வருவாய் (MR) |
|---|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 | 10 |
| 2 | 10 | 20 | 10 | 10 |
| 3 | 10 | 30 | 10 | 10 |
| 4 | 10 | 40 | 10 | 10 |
| 5 | 10 | 50 | 10 | 10 |
| 6 | 10 | 60 | 10 | 10 |



குறைந்த விலையில் மட்டுமே ஒரு நிறுவனம் அதிகபட்சம் பொருட்களை விற்கக்கூடும். அந்நிலையில் சராசரி வருவாய் (விலை) குறைந்து கொண்டே செல்லும் AR குறையும் போது MR ம் குறையும் ஆனால் இறுதிநிலை வருவாய் சராசரி வருவாயை விட கூடுதலாகக் குறையும். இதனால் இறுதிநிலை வருவாய்க்கு கீழ் அமைத்து விடும்.

| விற்பனை செய்யப்படும் அலகுகள் | விலை | மொத்த வருவாய்( TR) | சராசரி வருவாய் (AR) | இறுதிநிலை வருவாய் (MR) |
|---|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 | 10 |
| 2 | 9 | 18 | 9 | 8 |
| 3 | 8 | 24 | 8 | 6 |
| 4 | 7 | 28 | 7 | 4 |
| 5 | 6 | 30 | 6 | 2 |
| 6 | 5 | 30 | 5 | 0 |




3. **குறுகிய கால சராசரி வளைவுக்கோட்டை விவரிக்கவும்?**

**குறுகிய கால சராசரி வளைவுக்கோடுகள்:**

சராசரி செலவு என்பது, உற்பத்தியின் ஒரு அலகிற்கான செலவாகும். இதுமொத்த செலவினை உற்பத்தி அலகுகளால் வகுக்கும் போது, கிடைக்கும் ஈவாகும்.

**சராசரி மாறாச் செலவு(AFC)**

சராசரி மாறாச் செலவு என்பது உற்பத்தியின் ஒரு அலகிற்கான மாறாச் செலவாகும். இது மொத்த மாறாச் செலவினை உற்பத்தி அலகுகளால் வகுக்கும்போது கிடைக்கும் ஈவாகும்.

**சராசரி மாறும் செலவு(AFC)**

சராசரி மாறும் செலவு என்பது உற்பத்தியின் ஒரு அலகிற்கான மாறும் செலவாகும். இது மொத்த மாறும் செலவினை உற்பத்தி அலகுகளால் வகுக்கும்போது கிடைக்கும் ஈவாகும்.

**குறுகியகால செலவு அட்டவணை:-**

| மொத்த அலகுகள் | மொத்த மாறா செலவு | மொத்த மாறும் செலவு | மொத்த செலவு | சராசரி மாறாச் செலவு | சராசரி மாறும் செலவு | சராசரி செலவு |
|---|---|---|---|---|---|---|
| 0 | 120 | 0 | 120 | -- | -- | -- |
| 1 | 120 | 100 | 220 | 120 | 100 | 220 |
| 2 | 120 | 160 | 280 | 60 | 80 | 140 |
| 3 | 120 | 210 | 330 | 40 | 70 | 110 |
| 4 | 120 | 240 | 360 | 30 | 60 | 90 |
| 5 | 120 | 400 | 520 | 24 | 80 | 104 |
| 6 | 120 | 880 | 1000 | 15 | 110 | 125 |

**குறுகிய கால சராசரி செலவு வளைகோடுகள்:**




சராசரி செலவுக்கோடு சராசரி மாறும் மற்றும் மாறாச் செலவுக் கோட்டின் அடிப்படையில் அமையும். துவக்கத்தில் சராசரி மாறும் மற்றும் மாறாச் செலவு குறைவதால் சராசரி செலவும் குறைகிறது. சராசரி மாறும் செலவு அதிகரிக்கும் போது சராசரி மாறாச் செலவு செங்குத்தாக சரிகிறது. உற்பத்தி அதிகரிக்கும் போது சராசரி மாறும் செலவு அதிகரிக்கிறது. சராசரி மாறாச் செலவு தொடர்ந்து சரிகிறது. இதனால் சராசரி செலவு கோடும் அதிகரிக்கிறது. சராசரி செலவுக் கோடு சராசரி மாறாச் செலவுக் கோட்டை போன்று முதலில் குறைந்து ஒரு குறைவுப் புள்ளியை எட்டியவுடன் உயரத் தொடங்குகிறது. இது 'U' –வடிவத்தில் அமைகிறது.

**4. இறுதிநிலைச் செலவினை சரியான விளக்கத்துடன் கூறுக.**

**இறுதிநிலைச் செலவு(Marginal cost):**

ஏற்கனவே உள்ள உற்பத்தி அளவில், ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால், மொத்த செலவில் ஏற்படும், கூடுகின்ற நிகர அளவு செலவே இறுதிநிலை செலவு என்று வரையறை செய்யப்படுகின்றது.

**இறுதிநிலைச் செலவு கணக்கீடு:**

| உற்பத்தி அலகுகள் | மொத்தச் செலவு | இறுதிநிலைச் செலவு |
|---|---|---|
| 0 | 20 | -- |
| 1 | 40 | 20 |
| 2 | 50 | 10 |
| 3 | 55 | 5 |
| 4 | 65 | 10 |
| 5 | 85 | 20 |

எடுத்துக்காட்டாக ஒரு நிறுவனம் 100 அலகுகள் உற்பத்தி செய்கிறது. இறுதிநிலைச் செலவு என்பது 100 அலகுகள் உற்பத்தி செய்ய ஆகும் மொத்த செலவிலிருந்து 99 அலகுகள் உற்பத்தி செய்ய ஆகும் செலவினை கழித்தால் கிடைப்பதே ஆகும். அந்நிறுவனம் 99 அலகுகளை உற்பத்தி செய்ய ரூ.9000/= மொத்த செலவாகிறது என்று வைத்துக் கொண்டால் 100 அலகுகள் உற்பத்தி செய்ய ரூ.10,000 செலவாகும் போது ரூ.1000/= இறுதிநிலை செலவாகும். அந்நிறுவனம் ஒரு அலகு பொருள் கூடுதல் உற்பத்தி செய்ய ரூ.1000/= செலவு செய்துள்ளது குறியீடுகளில்

$$MC_n = TC_n - TC_{n-1}$$

$MC_n$ = இறுதி நிலைச் செலவு
$TC_n$ = n அலகுகள் உற்பத்தி செய்ய ஆகும் மொத்த செலவு
$TC_{n-1}$ = n-1 அலகுகள் உற்பத்தி செய்ய ஆகும் செலவு




இறுதிநிலை வளைகோடு U வடிவத்தைக் கொண்டுள்ளது. இவ்வடிவத்தை மாறும் விகித விளைவு விதி தீர்மானிக்கிறது. வளர்ந்து செல் விளைவு விதியின் இயக்கத்தினால் இறுதிநிலை வளைகோடு சரிந்து விடும். ஏனனெனில் உற்பத்தி அலகுகள் கூடும் பொழுது செலவு குறைந்துவிடும். குறைந்து செல் விளைவு விதி இயங்குவதாலும் உற்பத்தி அளவில் சிக்கனமின்மையாலும் இறுதிநிலை வளைகோடு அதிகரிக்கும். ஏனனெனில் வளர்ந்து செல் செலவின் காரணமாக ஏற்படுகிறது.

**5. SAC மற்றும் SMC –க்கும் உள்ள உறவினைக் கூறுக.**

குறுகிய கால சராசரி வளைகோட்டிற்கும் குறுகிய கால இறுதிநிலை செலவு வளைகோட்டிற்கும் இடையே உள்ள தொடர்பு கணித ரீதியில் விளக்குதல் எளிதாக அமைந்துள்ளது.

**சராசரி செலவு:**

சராசரி செலவு என்பது மொத்த செலவை உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளால் வகுத்ததால் கிடைக்கக் கூடியது ஆகும்.

**இறுதிநிலைச் செலவு:**

ஏற்கனவே உள்ள உற்பத்தி அளவில், ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால், மொத்த செலவில் ஏற்படும், கூடுகின்ற நிகர அளவு செலவே இறுதிநிலை செலவு என்று வரையறை செய்யப்படுகின்றது.

**அட்டவணை:** **வரைபடம்**

| உற்பத்திச் அலகுகள் | மொத்தச் செலவு | சராசரி செலவு | இறுதிநிலை செலவு |
|---|---|---|---|
| 1 | 50 | 50 | ---- |
| 2 | 80 | 40 | 30 |
| 3 | 90 | 30 | 10 |
| 4 | 108 | 27 | 18 |
| 5 | 150 | 30 | 42 |
| 6 | 240 | 40 | 90 |
| 7 | 350 | 50 | 110 |




**இவற்றின் தொடர்களை கீழ்கண்டவாறு அளிக்கலாம்.**

1. இறுதிநிலை செலவு சராசரி செலவை விட குறைவாக இருக்கும் போது சராசரி செலவு குறைகின்றது.
2. இறுதிநிலை செலவு சராசரி செலவை விட அதிகமாக இருக்கும் போது சராசரி செலவு அதிகரிக்கின்றது
3. இறுதிநிலை செலவு வளைகோடு சராசரி வளைகோட்டின் தாழ்ந்து (குறைந்த) புள்ளியில் கீழிருந்து வெட்ட வேண்டும் இவ்வாறு சராசரி செலவின் (AC) குறைந்த புள்ளியில் MC, AC க்கு சமமாக இருக்கும்.

**6. சேயின் அங்காடி விதியின் குறைபாடுகளைக் கூறுக?**

1. உலகப் பெருமந்தத்தினால் ‘சே’ விதியின் புகழ் மங்கிப் போனது.
2. ஈட்டிய வருமானம் அனைத்தும் எப்போதும் நுகர்விற்கே செலவிடப்படுவதில்லை
3. இது போலவே, சேமிப்பு அனைத்தும் முதலீடு செய்யப்படுவதில்லை
4. இவ்விதி அங்காடி பற்றிய தவறான ஆய்வினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
5. “ஒட்டுமொத்தம்” என்ற தவறான கருத்தால் இது பாதிக்கப்படுகிறது
6. ஒட்டு மொத்த அளிப்பும், ஒட்டு மொத்தத் தேவையும் எப்போதும் சமமாக இருப்பதில்லை
7. வட்டி விகிதம் சமப்படுத்தும் காரணியல்ல.
8. முதலாளித்துவ முறை எப்போதும் தன்னைத்தானே சரி செய்து கொள்ளாது.
9. ‘நிறைவுப் போட்டி’ என்பது உண்மையற்ற ஒரு எடுகோள் ஆகும்.
10. பொருளாதாரத்தில் ‘பணம்’ ஒரு முக்கியச் ‘சக்தி’யாகும்.
11. இவ்விதி நீண்ட காலத்திற்கு மட்டுமே பொருந்தும்
12. பண்டமாற்றுப் பொருளாதாரத்திற்கு மட்டுமே “சே” விதி பொருந்தும்

**7. கீன்சு கோட்பாட்டின் சாராம்சத்தை படம் வரைந்து விளக்குக.**
***வருமானம் வேலைவாய்ப்பைப் பற்றிய கீன்சின் தகவல் படம்***



**8. நுகர்வுச் சார்பை வரைபடத்துடன் விளக்குக?**

**<u>நுகர்வுச்சார்பு:</u>**

மக்கள் பெருவாரியான வருமானத்தை பண்ட நுகர்வுகளுக்குச் செலவிடுகின்றனர். சிலர் வருமானத்தை முழுவதுமாக செலவு செய்கின்றனர். வேறு சிலர் ஒரு பகுதியைச் செலவு செய்து மீதத்தை சேமிக்கின்றனர். மொத்தத்தில் சமுதாயம் எவ்வளவு செலவு செய்கிறது? எவ்வளவு சேமிக்கிறது? இது வருமானத்திற்கும் நுகர்விற்கும் இடையே உள்ள தொடர்பாகும், 'நுகர்வுச் சார்பு' என்பது வருமானத்திற்கும் நுகர்வதற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குகிறது. நுகர்வு சார்பு என்பது இரண்டு அல்லது அதற்கு மேல் உள்ள மாறிலிகள் தொடர்பை குறிக்கும்.




வருமான நிலைகளில் நுகர்விற்காகச் செலவிடப்பட்ட வருமானம் 'நுகர்ச்சி நாட்டம்' ஆகும் வருமானத்திற்கும்,நுகர்விற்கும் நேரடித் தொடர்புள்ளது என்கிறார் கீன்ஸ், நுகர்வுச்சார்பு அல்லது நுகர்ச்சி நாட்டம் என்பது வருமானத்திற்கும் நுகர்ச்சிக்கும் இடையே உள்ள சார்ந்த விகிதாச்சாரமே ஆகும். கணிதமுறைப்படி இத்தொடர்முறை கீழ்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

$c = a+by$

$c = 4+0.8y$

மேற்படி சமன்பாடு கூறுவதென்னவென்றால் நுகர்வு என்பது வருமானத்தை (Y) பொருத்து '+' குறியீடு குறிப்பிடுவது வருமானம் உயர நுகர்வும் உயர்வடைகின்றது என்பது தெளிவு. ஆனால், வருமானம் உயர்வடைந்த அளவிற்கு நுகர்விற்கு உயர்வு வீதம் அதிகரிக்காது. ஏனெனில் செலவழிக்கப்படாத வருமானத்தின் ஒரு பகுதி சேமிக்கப்படும். இச் சேமிப்பு 'கீன்ஸ்' நுகர்வுக் கோட்பாட்டில் விளக்கப்பட்டுள்ளது. <u>'உளவியல் ரீதியான சமுதாயத்தில் உண்மை வருமானம் உயரும் போது ஒட்டு மொத்த நுகர்வு அதிகரிக்கும். ஆனால் வருமானம் உயர்ந்த அளவுக்கு அல்ல'</u> என்கிறார் கீன்ஸ்'

$C = 4 + 0.8Y$ –ல் வருமானமே இல்லாவிட்டதலும் கடன் வாங்கியாவது ரூ.4 செலவு செய்யப்படுகிறது. 0.8y –ல் வருமானத்தில் 80% செலவழிக்கப்படுகிறது. 20% சேமிக்கப்படுகிறது.

இறுதிநிலை நுகர்வு நாட்டம் என்பது "வருமானத்தினால் ஏற்பட்ட நுகர்வு மாற்றத்தின் வீதம்" ஆகும். எனவே இறுதிநிலை நுகர்வு நாட்டம், நுகர்வு மாற்றத்தில் ஏற்பட்ட வீதம் அளவு ஆகும்.

**9. நுகர்வைத் தீர்மானிக்கும் வருமானம் தவிர பிற காரணிகளைக் கூறு?**

**<u>நுகர்வை நிர்ணயிக்கும் பிற காரணிகள்:</u>**

நுகர்வு செய்வதற்கு வருமானம் மிக முக்கியமான காரணியாக இருப்பினும், வேறு சில காரணிகளும் நுகர்வு நாட்டத்தை மாற்றமடையச் செய்யவல்லன. அவையாவன.

1. வருமானப் பகிர்வு
2. செல்வப் பகிர்வின் அளவு மற்றும் இயல்பு
3. மக்கள் தொகையின் வயதுப்பாகுபாடு

4. பணவீக்கம் அல்லது விலைஅளவு
5. அரசின் கொள்கைகள்
6. வட்டிவீதம்
7. விளம்பரங்கள்
8. வாழ்க்கைத்தர வளர்ச்சி
9. கலாச்சார மாற்றம்

ஒட்டு மொத்த தேவை 'நுகர்வுச்சார்பு' மற்றும் "உற்பத்திச் சார்பு" என இருபகுதிகளைக் கொண்டது. எனினும் குறுகிய காலத்தில் நுகர்வுச்சார்பு அல்லது இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் மாறாதிருக்கும் எனவே, கீன்ஸ் முதலீட்டுச் சார்புக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

**10. கீன்சின் வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டின் எடுக்கோள்களை விளக்குக?**

**எளிய வருமான நிர்ணயக் கோட்பாடுகள்:**

குறுகிய காலத்தில் நாட்டின் வருமான அளவு, வேலை வாய்ப்பில் ஏற்படும் மாற்றத்தைப் பொருத்து மாறுவதாக கீன்ஸ் குறிப்பிடுகிறார். ஒட்டு மொத்தத் தேவைமாற்றம் ஒட்டு மொத்த அளிப்பை பொருத்தே வேலை வாய்ப்பளவு ஏற்படும் மாற்றத்தைத் பொருத்து மாறுவதாக கீன்ஸ் குறிப்பிடுகிறார். ஒட்டு மொத்த தேவைக்கும் ஒட்டு மொத்த அளிப்பிற்கும் இடையே உள்ள ஒப்பீடு, வருமானத்தின் சமநிலை அளவு ஆகும். இவ்விரண்டும் சமமாக இருக்கும் போது "முழுவேலை வாய்ப்பு" நிலவுகிறது. இவ்வாறு வருமான நிர்ணயம், உற்பத்தி நிர்ணயம் மற்றும் வேலைவாய்ப்பு நிர்ணயம் ஆகியவற்றிற்கு இது பயன்படுகிறது.

**எடுகோள்கள்:**

வருமான நிர்ணயத்தை விளக்க கீழ்க்காணும் எடுக்கோள்களை கீன்சு பயன்படுத்துகிறார்.

1. இரு பிரிவனரே உள்ளனர் நுகர்வோர் (C) மற்றும் நிறுவனங்கள் (I)

2. பொருளாதாரத்தில் அரசின் தூண்டுதல் ஏதும் இல்லை (G) வேறுவகையில் சொல்வதானால் அரசின் செலவு 'பூஜ்ஜியம்' ஆகும் 'வரிகள்ஏதும் இல்லாததால் தனிநபர் வருமானம் அனைத்தும் செலவிடக் கூடிய வருமானமேயாகும்.

3. பொருளாதாரம் மூடப்பட்ட பொருளாதாரம் ஆகும் அயல்நாட்டு வாணிபத்தால் தூண்டுதல் ஏதும் இல்லை(x-m) அதாவது x-m = பூஜ்ஜியம் ஆகும்.

4. கூலி மற்றும் விலையில் மாற்றம் ஏதும் இல்லை(நிலையாக இருக்கும்)

5. வேலைக்கு அமர்த்தப்படாத வளங்கள் இருப்பதால் 'முழு வேலைவாய்ப்பு' நிலையைவிட குறைவான நிலையே நிலவுகிறது.

6. வட்டி வீதத்தில் எவ்விதமான மாற்றமும் இல்லை.

7. 'முதலீடு' தன்னிச்சையானது, எனவே விலைமட்டத்தைப் பொருத்தோ வட்டி விதத்தைப் பொருத்தோ அது அமைவதில்லை.

8. நுகர்வு செலவு ஒரே நிலையானது

முதல் மூன்று எடுகோள்களின் காரணமாக அடிப்படை சமன்பாடு

$Y = C+I+G+(x\text{-}m)$ என்ற சமன்பாடு சுருக்கப்பட்டு $Y = C+I$ ஆகிறது

11. **வரிவிதிப்புக் கொள்கையை விவரி?**

**வரி விதிப்பின் விதிகள்: ஆடம்ஸ்மித்தின் வரிவிதிப்புக் கொள்கை பின்வருமாறு:**

1. சமத்துவ விதி
2. தெளிவு விதி
3. வசதி விதி
4. சிக்கன விதி

**1. சமத்துவ விதி:**

இவ்விதியின் படி 'ஒருவன் தன்சக்திக்கேற்ப' வரிசெலுத்துவதே இதனுடைய கொள்கையாகும். வரிவிதிக்கும் போது வரி செலுத்துவோரின், சக்திகேற்ப வரி விதிக்க வேண்டும். ஏழைகள் மிக குறைவாகவும், பணக்காரர்கள் மீது அதிகமாகவும் வரி விதித்தல் வேண்டும். வரிவிதிப்பானது நிதியின் அடிப்படையில் அமைய வேண்டும் அனைத்து தரப்பு மக்களும் தங்களது சக்திக்கேற்ப வரி செலுத்த வேண்டும்.

**2. தெளிவு / உறுதி விதி:**

ஒவ்வொரு குடிமகனும் தான் செலுத்த வேண்டிய வரியின் அளவு, எப்பொழுது வரி செலுத்த வேண்டும். யாரிடம் வரி செலுத்த வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். இதுவே தெளிவு / உறுதி விதியாகும்.

**3 வசதி விதி:**

வரி செலுத்துதல். வரி செலுத்துவோருக்கு வசதியாகவும் பாரம் குறைந்ததாகவும் இருத்தல் வேண்டும். (எ.கா) சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரி, பண்டங்கள் மீதான வரிகள் பொருட்களை வாங்கும் போதே பெறப்படுதல்.

உதாரணம்: அறுவடையோடு பெறப்படும் நிலவரி.

**4. சிக்கன வசதி:**

இவ்விதி வரிவிதிப்பிலும், வரி வசூலிப்பதிலும் அதிக பணம் விரயமாகாமலிருக்க வேண்டும் என்ற தத்துவத்தைப் பற்றியது. இச்சிக்கன விதி வரிச்சட்டங்கள் மற்றும் வழிமுறைகள் எளிதான தாகவும் மக்களது வருமான வரிகளைக் குறைந்த அளவில் பயன்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும்.

12. **மாநில அரசின் முக்கிய வரி வருவாய் மற்றும் வரியற்ற வருவாய் எவை?**

**மாநில அரசால் விதிக்கப்படும் வரிகள்**

இந்திய அரசியல் அமைப்பு சட்டப்படி மாநில அரசுகள் வரிவிதப்பின் மூலம் வருமானம் பெறும் அதிகாரம் பெற்றுள்ளன. ஆனால் யூனியன் பரதேசங்களுக்காக நேரடியான நிதியுதவியை மத்திய அரசாங்கமே அளித்தது உதவும்.

**மாநில அரசால் விதிக்கப்படும் வரிகள்**

1. நில வருவாய் (வரி தீர்வை வசூலிப்பு உட்பட)
2. விற்பனை மற்றும் செய்தித்தாள் தவிர மற்ற பொருள்கள் மீதான வரிகள்
3. வேளாண்மை வருவாய் மற்றும் நிலம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள்.
4. நிலம் - மனைகள் கட்டிடங்கள் மீது விதிக்கப்படும் வரிகள்
5. வேளாண்மை நிலம் சார்பான வேளாண்பண்ணை வரிகள்
6. மதுவகைகள் மீது விதக்கப்படும் ஆயத்தீர்வைகள்
7. ஒரு மாநிலத்திலிருந்து பிரிதொரு மாநிலத்திற்குப் பண்டங்களைக் கொண்டுவரும் போது விதிக்கப்படும் வரிகள்
8. கனிமப் பொருட்களின் உரிமங்கள் மீது விதிக்கப்படும் வரிகள்
9. மின்சார நுகர்வு விற்பனை மீதான வரிகள்
10. விலங்குகள், படகுகள், வாகனங்கள் மீது விதிக்கப்படும் வரிகள்
11. இருப்புப்பாதை உள்நாட்டு நீர்வழி ஆகியவற்றில் கொண்டுச் செல்லும் சரக்குகள், பயணிகள் மீது விதிக்கப்படும் வரிகள்.
12. முத்திரைத்தாள் வரிகள், நீதிமன்ற கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணங்கள்
13. பொழுதுபோக்கின் மீது விதிக்கப்படும் வரிகள்
14. விளம்பரங்கள், செய்தித்தாள் தவிர்த்து பிற விளம்பரங்கள் மீதான வரிகள்
15. தொழில்கள், வர்த்தகம் வேலைகள் மீதான வரிகள்
16. நீர்ப்பாசனம் மற்றும் காடுகள் மூலம் கிடைக்கும் வரி வருமானங்கள்
17. மத்திய அரசின் மானியங்கள் மீதான வரிகள்
18. பிற வருமானங்கள் அதாவது பதிவுக் கட்டணம், வருமான வரியில் ஒரு பகுதி சுங்க வரிகள் மற்றம் கடன்கள் மீதான வரிகள்.

**13. ஆண்டு நிதிலை அறிக்கை என்பதை விளக்குக? சமநிலை மற்றும் சமநிலையற்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையை விவரிக்கவும்?**

**ஆண்டு நிதிலை அறிக்கை**

அரசின் வரிவருவாய் மற்றும் பொது கடன்களைப் பற்றிய தீர்மானங்கள் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வரவு செலவுத் திட்டத்தில் அளிக்கப்படுகின்றன. வளர்ச்சிக்கும், திட்டம் தீட்டுதலுக்கும் வரவு செலவுத் திட்டமானது இன்றியமையாததாகும். வளர்ச்சித் திட்டங்களின் நோக்கங்களை அடைய திட்டவட்டமான கொள்கை வழிமுறைகளை இவ்வரவுச் செலவுத் திட்டம் வரைந்து தருகிறது. மேலும் வரவும் செலவும் ஒன்றிற்கொன்று இணையாக நடைபெறாததால் இந்த வரவு செலவுத் திட்டமானது அவசியமானதாக இருக்கிறது.

**விளக்கம்:**

வரவு – செலவு திட்டம் என்பது ஆண்டு நிதிநிலை அறிக்கையாகும். இது அரசின் வரவு செலவுகளோடு கூடிய ஒரு நிதி ஆண்டிற்கான அறிக்கை "பட்ஜெட்" என்னும் சொல் பிரெஞ்சு மொழிச் சொல்லான பௌஜெட்டி - என்னும் பதத்திலிருந்து உருவானது இதற்கு "சிறிய பை" என்று பொருள். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இவ்வறிக்கையை நிதி அமைச்சர்கள் இப்பையில் வைத்துதான் கொண்டுவருவது வழக்கம். மத்திய, மாநில அரசுகள் ஒவ்வொரு நிதி ஆண்டு தோறும் இவ்வறிக்கையைத் தயாரிப்பர். இந்த திட்டங்களில் அரசின் நிதிக் கொள்கைகள், வரிக்கொள்கைகள், மூலதன ஆக்கங்கள் பற்றிய விளக்கங்கள் இடம் பெறும்.

**வரையறைகள் :**

வரவு – செலவுத் திட்டத்திற்கு வெவ்வேறான வரையறைகள் உருவாக்கப்பட்டன. பேராசியர் டிமாக் அவர்கள் குறிப்பிடும் போது "வரவு செலவுத் திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் சமமாக கணக்கிட்ட வரவு மற்றும் செலவு" என்கிறார். மேலும் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் முந்தைய செயல் பாட்டினைப் பதிவு செய்தல் நிகழ்காலத்தின் கட்டுப்படுத்தும் முறையாகவும் மற்றும் எதிர்காலத்தை பிரதிபலிக்கும் ஒரு திட்டமாகும்.

கிளாட் ஸ்டோன் கூற்றுப்படி, "வரவு செலவுத்திட்டம் என்பது வெறும் எண்ணியல் அடிப்படையானது மற்றும் அல்ல. ஆனால் தனிமனிதர்களின் செழுமை மற்றும் வகுப்பினரிடையேயான உறவு மேலும் அரசின் வலிமை ஆகியவற்றின் வேர் வரை ஆயிரம் வழிகளுக்கு மேல் செல்கிறது".

**14. நிதிக் கொள்கையின் வரையறை யாது?**

**நிதிக் கொள்கையின் குறைபாடுகள்:**

நிதிக் கொள்கையானது தனியார் மற்றும் பொதுத் துறைகளில் சேமிப்பு மற்றும் முதலீடுகளை அதிகரிக்க முடுக்கிவிடும் முக்கிய கருவியாக இருந்தாலும் இதில் கீழ்காணும் குறைபாடுகள் உள்ளன.

1. நிதித் தீர்வுகளின் அளவு
2. வணிகச் சூழல்களைக்கட்டுப்படுத்துவதில் நிதிக்கொள்கையின் குறைந்த வெற்றி
3. அரசு நிர்வாகத்தில் காலதாமதம்
4. மற்ற குறைபாடுகள்

**1. நிதித் தீர்வுகளின் அளவு**

நிதிநிலை அறிக்கை என்பது ஒரு சாதாரண வரவு – செலவு அறிக்கை மட்டுமல்ல அது ஒரு பொருளாதாரத்தின் வடிவமைப்பாகும். இவ்வரைவு நாட்டு வருமானத்தின் ஒரு சிறிய பகுதியாக இருப்பதனால் பொருளாதார வளர்ச்சியின் மீது விரும்பத்தக்க பாதிப்பை ஏற்படுத்த இயலாது. நம்நாட்டின் பெருமளவிலான மக்கள் ஏழைகளாக இருப்பதால் நேர்முக வரியை அதிக அளவில் நாம் பயன்படுத்த இயலவில்லை. மேலும் மொத்த வரிவருவாயானது நாட்டு வருமானத்தில் ஒரு சிறு பகுதியாக இருப்பதனால் பெருமளவு நிதியாக்கம் தேவைப்படுகின்ற பின் தங்கிய நிலையில் இருக்கின்ற பொருளாதாரத்தை முன்னேற்ற இந்நிதி போதாதாக உள்ளது.

**2. வணிகச் சூழல்களைக் கட்டுப்படுத்துவதில் நீதிக் கொள்கையின் குறைவான வெற்றி:**

ஒரு நாட்டின் துறைக்களுக்கிடையே ஒருங்கிணைப்பு ஏற்படாவிட்டால் நிதிக் கொள்கையின் கருவிகள் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுப்படுத்த முடியாது அரசு மேற்கொள்ளும் எல்லா செயல்பாடுகளும் அனைத்து துறைகளிலும் ஒரே மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தி இவ்வாறாக ஒரு துறையில் விலை ஏற்றத்தை ஏற்படுத்தும். பற்றாக்குறை நிதியாக்கத்தின் மூலம் ஏற்பட்ட வாங்கும் சக்தியின் அதிகரிப்பு 1930ம் ஆண்டின் பெரும் மந்தத்தைப் பற்றிய விளக்கிய J.M. கீன்ஸ் அவர்களின் மந்தம் தழுவிய பொருளாதாரங்களுக்கு இன்னும் கூடுதலான விலை ஏற்றத்தையே அளித்தது.

**3. அரசு நிர்வாகத்தில் காலதாமதம்**

நிர்வாகத்தடைகளினால் நீதிநிர்வாக கொள்கை நடைமுறைப் படுத்துவதில் கால தாமதமும், நிச்சயமற்ற சூழல் மற்றும் குழப்பநிலையும் ஏற்படக்கூடும். இதன் விளைவாக நிதிக் கொள்கையின் வலிமை செயல் இழக்கக் கூடும்.

**4.மற்ற குறைபாடுகள்:**

பெரும் அளவிலான வேலைக் குறைவு பொது மக்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மை, வரி ஏய்ப்புக்கள் குறைவான வரி விதிப்புக்கள் போன்றவை நிதிக் கொள்கையின் மற்றக் குறைபாடுகளாகும்.

**15. “நேர்முகவரி மற்றும் மறைமுகவரி” இவற்றை வேறுபடுத்திக் காட்டுக?**

**நேர்முக வரி மற்றும் மறைமுக வரி:**

பேராசிரியர் டால்டனின் கூற்றுப்படி “நேர்முகவரி” என்பது யார் மீது வரி விதிக்கப்பட்டதே அவரே வரி செலுத்துவதாகும்.

மறைமுகவரி என்பது ஒருவர் மீது வரி விதிக்கப்பட்டு, மற்றொருவர் பகுதியாகவோ (அல்லது) முழுமையாகவோ வரி செலுத்துவதாகும்.

நேர்முக வரியில் வரி செலுத்துபவரே வரிச் சுமையைச் சுமக்க வேண்டும். ஆனால் மறைமுக வரியில் வரிவிதிக்கப்பட்டவர் வேறு, வரிச் சுமையைச் சுமப்பவர் வேறு.

நேர்முக வரியானது மக்களிடமிருந்து நேரடியாக வசூலிக்கப்படுகிறது. இவ்வரியானது யார்மீது விதிக்கப்படுகிறதோ அவரிடமிருந்தே வசூலிக்கப்படுகிறது. இவ்வகை வரியில் வரி ஏய்ப்பு என்பது கடினமாகும்.

மறைமுக வரியானது பண்டங்கள் மற்றும் பணிகளின் மீது விதிக்கப்படுவது ஆகும். இதில் விதிக்கப்படும் வரியின் துவக்கச் சுமை ஒருவர் மீது இருப்பினும் உண்மை வரிச் சுமையானது மற்றொருவர் மீதுமாற்ற இயலும். “நிகழ்வு மாற்றம்” என்பது யார் வரியைச் செலுத்துகிறாரோ? உண்மையில் வரிச்சுமையை ஏற்பவர் யார் என்பதைக் குறிக்கிறது. நேர்முக வரியில் பணச்சுமையும், உண்மைச்சுமையும் ஒருவர் மீதே நிலை பெறுகிறது. ஆனால் மறைமுக வரியில் ஒரு மோட்டார் சைக்கிள் விற்பனையாளர் வரிச்சுமையை துவக்கத்தில் ஏற்பினும், பொருளை வாங்குபவரே வரிச்சுமையைப் பின் ஏற்கிறார்.

| நேர் **நேர்முகவரி (எ.கா)** | முறை **மறைமுக வரிக்கு (எ.கா)** |
|---|---|
| 1. வருமானவரி | 1.1. சுங்கவரி |
| 2. சொத்துவரி | 2.2. வீற்பனை வரி என்பனவாகும். |
| 3. வெகுமதி வரி | |
| 4. தீர்வை வரி என்பவையாகும். | |

**பின்வரும் வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடையளிக்கவும்:**

**1. தேவை விதியினை விபரமாக எழுதுக?**

**தேவை விதி:**

விலையும் தேவையும் எதிர்மறைத் தொடர்புடையன என்பதை தேவை விதி கூறுகிறது. இது ஒரு பொருளுக்கான விலையையும், ஒரு குறிப்பிட்ட கால அளவில் அந்த பொருளுக்கான தேவையையும் குறிக்கும்.

**வரையறை:**

**ஆல்∴பிரடுமார்ஷலின்** கூற்றுப்படி, "நிறைய பண்டங்களை விற்க வேண்டுமாயின், விலை குறைவாக இருக்க வேண்டும். அவ்வாறு விலை குறைவாக இருந்தால் தான் அப்பண்டத்தைப் பலரும் வாங்குவர் வேறு விதமாகக் கூறினால் விலை குறைவதால் தேவைப்படும் பண்டத்தின் அளவு கூடுகிறது. விலை கூடுவதால் தேவை குறைகிறது". **∴பெர்கூசன்** என்பவான் கூற்றுப்படி, "விலையும் தேவையின் அளவும் எதிர்கணியத் தொடர்பு கொண்டுள்ளன.

**தேவைவிதி:**

மற்றவை மாறாமலிருக்கும் போது ஒரு பொருளுக்கான விலை குறையும் போது மக்கள் அதிகம் அப்பொருளை வாங்குவர், விலைஏறும் போது குறைவாக வாங்குவர்.

**எடுகோள்கள்:**

அ. நுகர்வோரின் வருமானத்தில் மாற்றம் இஜ்லை

ஆ. நுகர்வோரது சுவையிலும் தேர்ந்தெடுத்தலிலும் மாற்றம் இல்லை.

இ. பிற பொருட்களின் விலையில் மாற்றம் இல்லை.

ஈ. பிற பதிலிகளை கண்டுபிடிக்கவில்லை

தற்போதைய விலை இறக்கம் பின் விரையும் யுகூடுதல் விலை வீழ்ச்சிக்கு முகவுரை என்று மக்கள் உணராமை ஆகும்.

**தேவைப்பட்டியல் மற்றும் தனிநபர் தேவைப்பட்டியல்**

ஒரு பண்டத்தின் பல்வேறு விலைகளையும் அவ்விலையில் ஒவ்வொன்றிற்கும் தேவையின் அளவையும் காட்டுகின்ற அட்டவணையே தேவைப்பட்டியல் என்பதாகும். தனிநபர் தேவைப்பட்டியலானது, ஒரு பண்டத்தின் பல்வேறு விலைகளில் வாங்க விரும்பும் பல்வேறு அளவை சுட்டிக் காட்டும்.

| விலை(ரூ) | ஆரஞ்சு தேவை அளவு |
|---|---|
| 5 | 1 |
| 4 | 2 |
| 3 | 3 |
| 2 | 4 |
| 1 | 5 |

**அட்டவணை விளக்கம்:**

அட்டவணையில் ஆரஞ்சு பழத்தின் விலை ரூ.5 ஆக இருக்கும் போது ஒருபழத்தையே வாங்குகிறார். அப்பழத்தின் விலை ரூ.4 ஆக குறையும் போது, இரு பழங்கள் வாங்குகின்றார். இவ்வாறு விலையானது குறையக் குறைய தேவையின் அளவானது அதிகரித்துச் செல்கிறது

**<u>தேவை வளைகோடு:</u>**

இந்த அட்டவணையை தேவை வளைகோடாக வரையலாம். தேவை வளைகோடு என்பது தேவை அட்டவணையின் வரைபடமாகும்.




தேவை அளவு

DD என்பது தேவைக்கோடு ஆகும். இத்தேவைக் கோடு இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கிச் சரிந்து செல்கிறது. இதில் விலை மாற்றங்களும் அதற்கேற்ப தேவையின் அளவில் ஏற்படும் மாற்றங்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. தேவைக்கோடு விலையும், தேவையும் எதிர்மறைத் தொடர்புள்ளதை காட்டுகிறது.

**<u>தேவை வளை கோடு கீழ்நோக்கி சரிந்து செல்வது ஏன்:</u>**

தேவைக் கோடு சரிவதற்கான காரணம், குறைந்து செல் இறுதிநிலை பணன்பாட்டுவிதி. இவ்விதியானது பண்டங்கள் கூடுதலாக நுகர்வதானால் பயன்பாடானது குறைந்துச் செல்கிறது. அதுபோல் தேவைக்கோடும் கீழ்நோக்கி சரிந்து செல்கிறது.

**<u>அட்டவணை விளக்கம்:</u>**

அட்டவணையில் ஆரஞ்சு பழத்தின் விலை ரூ.5 ஆக இருக்கும் போது ஒருபழத்தையே வாங்குகிறார். அப்பழத்தின் விலை ரூ.4 ஆக குறையும் போது, இரு பழங்கள் வாங்குகின்றார். இவ்வாறு விலையானது குறையக் குறைய தேவையின் அளவானது அதிகரித்துச் செல்கிறது.

**<u>அங்காடித் தேவை அட்டவணை:</u>**

அங்காடித் தேவைப்பட்டியல் என்பது, அங்காடியில் உள்ள நுகர்வோர் அனைவரின் தேவை அளவுகளை ஒன்றுக் கூட்டினால் கிடைப்பதாகும். ஆரஞ்சு பழ அங்காடியில் இரு நுகர்வோர் இருப்பதாக வைத்துக் கொண்டால், அங்காடித் தேவையானது கீழ்காணும் வகையில் கணக்கிடப்படுகிறது.

**<u>இரண்டு நுகர்வோரது தேவைப்பட்டியல் மற்றும் அங்காடித் தேவைப்பட்டியல்:</u>**

| விலை (ஆரஞ்சு) | நுகர்வோர் 1 | நுகர்வோர் 2 | அங்காடித் தேவை |
|---|---|---|---|
| 5 | 1 | -- | 1 |
| 4 | 2 | 1 | 3 |
| 3 | 3 | 2 | 5 |
| 2 | 4 | 3 | 7 |
| 1 | 5 | 4 | 9 |

| நுகர்வோர் 1-க்கான தேவை | நுகர்வோர் 2-க்கான தேவை | அங்காடி தேவை |
|---|---|---|




**<u>அங்காடித் தேவை கோட்டின் விளக்கம்:</u>** இரு நுகர்வோரின் மொத்த தேவை, அதாவது $D_1 + D_2 = DD$ என்ற அங்காடித் தேவைக்கோரும், தனி நுகர்வு தேவைக் கோட்டைப் போன்றே கீழ்நோக்கி சரிந்து செல்கின்றன. 'DD' என்ற தேவைக்கோடு தோற்றுவாய் நோக்கி குவிந்துள்ளது. இது விலைக்கும் தேவையின் அளவுக்கும் உள்ள தலைகீழ் தொடர்பை விளக்குகிறது.

**2.விலைத் தேவை நெகிழ்ச்சியின் முறைகளை விவரமாக எழுது?**

**<u>விலைத் தேவை நெகிழ்ச்சி:</u>**

விலை மாற்றத்தினால், தேவையில் ஏற்படுவதான மாற்றம் அளவே விலைத் தேவை நெகிழ்ச்சி ஆகும்.

விலைத் தேவை நெகிழ்ச்சி என்பது, ஒரு பண்டத்தின் தேவையில் தோன்றும் மாற்றத்தின் விழுக்காட்டினை அப்பண்டத்தின் விலை மாற்ற விழுக்காட்டால் வகுக்க கிடைக்கும் ஈவு விலைத் தேவை நெகிழ்ச்சி என்கிறோம். அதனை கீழ்க்காணும் கமன்ாட்டால் விளக்கலாம்.

$$\text{விலைத் தேவை நெகிழ்ச்சி} = \frac{\text{தேவை மாற்றத்தின் விழுக்காடு}}{\text{பண்டத்தின் விலை மாற்றம் விழுக்காடு}}$$

**கணிதக் குறியீடு** $= \dfrac{\Delta q / q}{\Delta p / p} = \dfrac{\Delta q}{q} \times \dfrac{p}{\Delta p}$

**<u>விலைத் தேவை நெகிழ்ச்சியை அளவிடுதல்:</u>**

இது நான்கு முறைகளில் அளவிடப்படுகிறது

1. விழுக்காட்டு முறை
2. புள்ளிமுறை (or) சரிவு முறை
3. மொத்த செலவு முறை
4. வில் முறை என்பவையாகும்

**1. <u>விழுக்காட்டு முறை:</u>**

தேவை மாற்ற விழுக்காட்டை, விலை மாற்ற விழுக்காட்டால் வகுத்து தேவை நெகிழ்ச்சியை அளவிடலாம். இதன் வாய்ப்பாடு யாதெனில்

$$e_p = \frac{\% \nabla q}{\% \nabla p}$$

(எ.கா) அரிசியின் விலை 10 சதவீதம் உயரும்போது அரிசியின் தேவை 15 சதவீதமாக குறைந்தால் விலைத் தேவை நெகிழ்ச்சி (ep) என்பது

$$ep = \frac{15}{10} = 1.5$$

இதன் பொருள், அரிசியின் விலைத் தேவை நெகிழ்ச்சியுடையதாக இருக்கிறது. அதுபோல் 10% அளவிற்கு அரிசியின் விலை உயரும் போது அதன் தேவை 5% அளவு மட்டுமே குறைந்தால் அரிசியின் தேவை நெகிழ்ச்சியற்றதாக உள்ளது என்ற பொருளாகும்.

$$ep = \frac{5}{10} = .5$$

**<u>விலைத் தேவை நெகிழ்ச்சியின் வகைகள்:</u>**

விலைத் தேவையின் நெகிழ்ச்சியை 5 வகைப்படுத்தலாம்.

1. மிகைத் தேவை நெகிழ்ச்சி (ed>1)
2. குறைவான தேவை நெகிழ்ச்சி (ed<1)
3. அலகுத் தேவை நெகிழ்ச்சி (ed=1)
4. முழு நிறைவான நெகிழ்ச்சியற்ற தேவை (ed=0)
5. முழு நிறைவான நெகிழ்ச்சியுள்ள தேவை (ed=α)

**மிகைத் தேவை நெகிழ்ச்சி** **குறைவான தேவை நெகிழ்ச்சி**















**2. புள்ளிமுறை:**

நேராக அமைந்துள்ள தேவைக்கோட்டின் மீது உள்ள ஒரு குறிப்பிட்ட புள்ளியில், விலைத் தேவை நெகிழ்ச்சியைக் கணக்கிடலாம்.

புள்ளிமுறையில் விலைத் தேவை நெகழ்ச்சியின் சூத்திரமாவது:

| விலைத் தேவைநெகிழ்ச்சி = | தேவைக் கோட்டின் கீழ்பகுதி / தேவைக் கோட்டின் மேல்பகுதி |
|---|---|




மேற்காணும் படத்தில் AB - என்பது 4 செ.மீ எனக் கொள்வோம். இதனை 4 சம பகுதியாக பிரித்துக் கொள்ள வேண்டும்.

1. மையப்புள்ளி E - யில் விலைத்தேவை

   தேவை நெகிழ்ச்சி = $\frac{EB}{EA} = \frac{2}{2} = 1$

   எனவே Ed = 1

2. D என்னும் புள்ளியில் விலைத்தேவை

   தேவை நெகிழ்ச்சி = $\frac{DB}{DA} = \frac{1}{3} = 0.33$

   எனவே Ed < 1

3. C என்னும் புள்ளியில் விலைத்தேவை

   தேவை நெகிழ்ச்சி = $\frac{CB}{CA} = \frac{3}{1} = 3$

   எனவே Ed > 1

4. B என்னும் புள்ளியில் விலைத்தேவை

   தேவை நெகிழ்ச்சி = $\frac{0}{AB} = \frac{0}{4} = 0$

   எனவே Ed = 0

5. A என்னும் புள்ளியில் விலைத்தேவை

   தேவை நெகிழ்ச்சி = $\frac{AB}{0} = \alpha$

   எனவே Ed = α

**3. மொத்த செலவு முறை:**

ஒரு பண்டத்தின் விலை மாற்றத்தினால், ஏற்படும் மாற்றத்தினைக் கொண்டு விலைத்தேவை நெகிழ்ச்சியைக் கணக்கிடலாம்.

இவ்வெவ்வேறான விளைவுகளைக் கீழ்காணுமாறு அட்டவணைப்படுத்தலாம்.

| விலை மாற்றம் | விலைத் தேவை நெகிழ்ச்சியின் வகைகளை | | |
|---|---|---|---|
| | ep = 1 | ep < 1 | ep > 1 |
| விலை இறக்கம் | மொத்த ஒதுக்கீடு மாறாமலிருத்தல் | மொத்த ஒதுக்கீடு குறைகிறது | மொத்த ஒதுக்கீடு அதிகரிக்கிறது |
| விலை ஏற்றம் | மொத்த ஒதுக்கீடு மாறாமலிருத்தல | மொத்த ஒதுக்கீடு அதிகரிக்கிறது | மொத்த ஒதுக்கீடு குறைகிறது |

**4. வில் முறை:**

ஒரு தேவை வளைகோட்டின் இரண்டு புள்ளிகளுக்கிடையே உள்ள பகுதியே வில் எனப்படும். வில் முறையில் விலைத் தேவை நெகிழ்ச்சியை கீழ்காணும் முறையில் கணக்கிடலாம்.

ஒரு பண்டத்தின் விலை மாற்றம் பெருமளவில் இருந்தால் விலைத் தேவை நெகிழ்ச்சியை கணக்கிட இவ்வில் முறையைக் கையாளலாம். அவ்வில் முறையை கீழ்காணும் வரைபடம் மூலம் விளக்கலாம்.




மேற்கண்ட வரைபடத்தில், வில் நெகிழ்ச்சியை A&B என்ற தேவைக் கோட்டின் இரண்டு புள்ளிகளுக்கிடையே கணக்கிடலாம். இதற்கு OP1 மற்றும் OP2 இந்த இரண்டு விலைகளுக்கிடையேயான சராசரியை கணக்கிட்டு மற்றும் இரண்டு தேவை அளவுகளின் சராசரியையும் கணக்கிடல் வேண்டும், இதுவே வில் நெகிழ்ச்சி ஆகும்.